Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk

சனிக்கிழமை டிசெம்பர் 04, 2021 | ஒளி: 07 கதிர்: 170 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | FREE



# பகலில் இருண்டு மாலையில் விடிந்தது

- தண்ணீர் தடையால் திண்டாட்டம்
- சமிக்ஞை விளக்குகள் அணைந்தன
- ரயில்கள் நின்றன; வீதியில் நெரிசல்
- சதியல்ல என்கிறது தொழிற்சங்கம்

யாருமே எதிர்பார்க்காத நிலையில், திடீரென ஏற்பட்ட மின்தடையால், நேற்றுக்காலை 11 மணிமுதல் மாலை 4.30 மணிவரையிலும் நாடுபூராகவும் மக்கள் பெரும் அவதிக்கு உள்ளாகியிருந்தனர். மின்தடையுடன் சேர்த்து, தண்ணீர் விநியோகமும் பல இடங்களில் தடைப்பட்டிருந்தது.

இலங்கை மின்சார சபையின் பொறியிலாளர் சங்கம், வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்த நிலையில், மின்தடை ஏற்பட்டமையால், தொழிற்சங்கத்தின் சதியால் மின்தடை ஏற்பட்டதாக பரவலாக குற்றஞ்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. எனினும், அக்குற்றச்சாட்டை மறுத்த தொழிற்சங்கம், வேலைநிறுத்தப் போராட்டத்தை தற்காலிகமாக முடிவுக்குக் கொண்டுவந்தது.

ஆனாலும், மின்தடை ஏற்பட்டமைக்கான சரியான காரணங்கள் எவையும் கண்டறியப்படவில்லை. எனினும், 'மின்சாரம் இல்லை', 'தண்ணீர் இல்லை', 'சமைப்பதற்கு காஸ் இல்லை', 'மரக்கறிகள் இல்லை', 'பால் மா இல்லை', 'டொலர் இல்லை', வெட்கமும் இல்லை' என சமூகவலைத்தளங்களில் பதிவிட்டப்பட்டிருந்தன.

இதற்கிடையில், நாட்டின் பல பாகங்களிலும் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்களில், வாகனங்கள் வரிசையாக நின்றன. மண்ணெண்ணெய் கொள்வனவு செய்வதற்கும் மக்கள் சென்றிருந்தமையை அவதானிக்கமுடிந்தது.

தொடர்ச்சி P2

அத்தியாவசிய பொருட்களுக்கு

## பாரிய தட்டுப்பாடு வரப்போகிறது

### அநுர எச்சரிக்கை

பா.நிரோஸ்



அத்தியாவசிய பொருட்களுக்கான பாரிய தட்டுப்பாடொன்று நாட்டில் ஏற்படப்போவதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் எம்.பியுமான அநுரகுமார திஸாநாயக்க எச்சரித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (03) அமர்வில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், கடந்த இரு வருடங்களாக வேகமாக நாட்டின் அந்நியசெலாவணி வீழ்ச்சியடைந்து வருகிறது. இது நாட்டு மக்களின் வாழ்வில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

சீனா சேதன பசளை விவகாரம்

## தடை உத்தரவு நீடிப்பு



சீனாவின் சேதன பசளைக்கான கட்டணத்தை செலுத்துவதை இடைநிறுத்தி மக்கள் வங்கிக்கு விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவு எதிர்வரும் 23 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு வணிக மேல் நீதிமன்றத்தால் இந்த தடை உத்தரவு நேற்று (03) நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு வணிக மேல் நீதிமன்றத்தின் நீதிபதிகளான பிரதீப் ஹெட்டியாராச்சி, பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் முன்னிலையில் மேற்படி மனு, நேற்று (03) மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

தொடர்ச்சி P2

## எரிவாயு விநியோகம் இடைநிறுத்தம்

தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு, சந்தைக்கு எரிவாயு விநியோகம் மேற்கொள்ளும் செயற்பாடு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. லிட்ரோ காஸ் சிலிண்டர் விநியோகமே இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், "மறு அறிவித்தல் வழங்கப்படும் வரை, சந்தைக்கு எரிவாயு விநியோகிக்கப்பட மாட்டாது" என நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

இதனிடையே, எரிவாயு சிலிண்டர்களில் குமிழ் வெளியேறுதல்,

தொடர்ச்சி P2




சஜித் ஆட்சியில்

## மாவீரர் தின நிகழ்வுகளுக்கு தடை விதிப்போம்

பா.நிரோஸ்

எதிர்காலத்தில் அமைய உள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில், மாவீரர் தின நிகழ்வுகளுக்கு தடை விதிக்கப்படும் என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (03) குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய பொன்சேகா, இலங்கைக்கு வந்த 75 ஆயிரம் இந்திய இராணுவத்தினரையே வெறும் 2,500 பேரை அப்போது கொண்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் வீழ்த்தினார்கள். அரசியல் கைதிகளை விடுதலை செய்வதை நாம் முழுமையாக வரவேற்போம்.



தொடர்ச்சி P2

## விநியோகத்தை நிறுத்துமாறு அறிவுறுத்தல் கிடைக்கவில்லை

### லாஃப்ஸ் அறிவிப்பு: மறுத்தார் லசந்த


லாஃப்ஸ் காஸ் சிலிண்டர் விநியோகத்தை நிறுத்துமாறு எந்தவித அறிவுறுத்தல்களும் தமக்கு இதுவரை கிடைக்கவில்லையென லாஃப்ஸ் காஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினரால் வழங்கப்படவில்லை என்றும் லாஃப்ஸ் காஸ் நிறுவனத்தினால் அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துரைத்த இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண, லிட்ரோ காஸ் லங்கா லிமிடெட் மற்றும் லாஃப்ஸ் காஸ் பிஎல்சி ஆகிய நிறுவனங்களுக்கு உள்நாட்டில், எரிவாயு சிலிண்டர் விநியோகத்தை இடைநிறுத்துமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2




## நுழைந்தது ஒமிக்ரான்

தென் ஆபிரிக்காவில் இனங்காணப்பட்ட ஒமிக்ரான் பிறழ்வு தொற்றுக்குள்ளான ஒருவர், நமது நாட்டிலும் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

"நைஜீரியாவுக்குச் சென்று கடந்த 23 ஆம் திகதி நாட்டுக்குத் திரும்பிய ஒருவருக்கே ஒமிக்ரான் பிறழ்வு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது" என சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## புதுக்குடியிருப்பில் காஸ் அடுப்பு வெடித்தது

சண்முகம் தவசீலன்




முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு மேற்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள வீடொன்றில், நேற்றுக்காலை 11 மணியளவில் காஸ் அடுப்பு வெடித்துள்ளது.

சமையல் செய்துகொண்டிருந்த வேளையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. அச்சந்தர்ப்பத்தில் அருகில் யாரும் இருக்கவில்லை என்பதால், அனர்த்தம் தவிர்க்கப்பட்டது.

காஸ் அடுப்புகள் வெடிக்கும் சம்பவங்கள் நாட்டின் பல பாகங்களிலும் இடம்பெறுகின்றன. முல்லைத்தீவு மாவட்டத்தில், நேற்று (03) முதலாவது சம்பவம் பதிவாகியுள்ளது.

## ஷிராஸ் யூனுஸுக்கு பதவி வழங்கவில்லை


### பிரதமர் ஊடகப் பிரிவு விளக்கம்



ஷிராஸ் யூனுஸ் எனும் நபர் பிரதமரின் முஸ்லிம் விவகார இணைப்பாளராக பதவி வகிக்காததுடன், குறித்த நபருக்கு பிரதமர் அலுவலகத்தில் எவ்வித பதவிகளும் வழங்கப்படவில்லை என பிரதமர் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## விடுமுறை நீடிப்பு



நத்தார் பண்டிக்கைக்காக சகல பாடசாலைகளுக்கும் வழங்கப்பட்ட விடுமுறை கல்வி அமைச்சால் நீடிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பிலான அறிவிப்பு நேற்று (03) விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அனைத்து அரச மற்றும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளுக்கும் டிசெம்பர் 24 ஆம் திகதி முதல் 2022 ஜனவரி 02 ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

முன்னதாக டிசெம்பர் 23 ஆம் திகதி முதல் சனி, ஞாயிறு கிழமைகள் உள்ளடங்கலாக விடுமுறை வழங்கப்பட்டு, டிசெம்பர் 27ஆம் திகதி மீளவும் ஆரம்பிக்கப்பமென அறிவிக்கப்பட்டிருந்தது.




## ஆட்சேபம் தெரிவிப்பு

11 தமிழ் இளைஞர்களைக் கடத்தி, காணாமலாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை, சட்டமா அதிபர் வாபஸ் பெற்றுக்கொண்டமைக்கு ஆட்சேபம் தெரிவித்து, மக்கள், சட்டத்தரணிகள், காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பு இணைந்து, புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் நேற்று (03) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (படங்கள்: பிரதீப் தில்ருக்ஷண)

## மக்கள் கிளர்ச்சி ஆரம்பித்துவிட்டது

பா.நிரோஸ்



நாட்டில் அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் கிளர்ச்சி ஆரம்பித்து விட்டதாகத் தெரிவிக்கும் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், இந்த மக்கள் கிளர்ச்சி ஆட்சி மாற்றத்தில் மாத்திரமே முடியுமெனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (03) குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ,

தொடர்ச்சி P2

## மது போதையில் அட்டகாசம்; இளைஞன் பலி: பிக்கு படுகாயம்

எச்.எம்.எம்.பர்ஸான்

யானைகளை விரட்டுவதற்குப் பயன்படுத்தும் வெடி, இளைஞன் ஒருவனின் வயிற்றில் பட்டதில் சம்பவ இடத்திலே இளைஞன் உயிரிழந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓமனியாமடு, கல்மடு, மலையடிவாரம் எனும் இடத்தில் வைத்தே நேற்று முன்தினம் (2) இரவு 9.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

## சஹ்ரானின் பாசறையில் பங்கேற்ற இளைஞன் கைது

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேக நபர்களுடன் தொடர்பைப் பேணிய குற்றச்சாட்டின் கீழ், மற்றுமோர் இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாவனெல்ல, ஹிங்குல பகுதியை சேர்ந்த 25 வயதான இளைஞனே கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த பொலிஸார், பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பிலேயே அவர், கைது செய்யப்பட்டுள்ளார்.

சஹ்ரான் ஹாசிமினால் ஹம்பாந்தோட்டையில் நடத்திச் செல்லப்பட்ட பயிற்சி முகாமில் பயிற்சிகளை சந்தேகநபர் பெற்றுள்ளதாகத் தெரிவித்த பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், சட்டத்தரணி நிஹால் தல்துவ, சந்தேகநபரை தடுத்து வைத்து விசாரணை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.



PAGE 1 தொடர்ச்சிகள்

# பகலில் இருண்டு மாலை விடிந்தது

மின்சார தடைப்பட்டமையால், ரயில் சமிக்ஞை கட்டுப்பாடுகளும் செயலிழந்தன. இதனால், கொழும்பு கோட்டையில் இருந்து புறப்படவேண்டிய ரயில்கள் பல, தாமதித்தே புறப்பட்டன. பிரதான வீதிகளில் சமிக்ஞை விளக்குகள் அணைந்தமையால், பல வீதிகளில் கடும் வாகன நெரிசல்களும் ஏற்பட்டன.

அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் உள்ளிட்டவற்றில் மின்பிறப்பாக்கியின் ஊடாக மின்சாரம் விநியோகிக்கப்பட்டது. கொழும்பு உள்ளிட்ட நகர்புறங்களில் தொடர்மாடிகளில் குடியிருப்போர், மின்சார தடையினால் பெரிதும் சிரமப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், நேற்றுமாலை 5 மணியளவில் அறிவிப்பொன்றை விடுத்த இலங்கை மின்சார சபை, அதனைத்து துணை மின் நிலையங்களின் ஊடாகவும் 1000 மெஹாவோட் மின்சாரம், தேசிய மின் தொகுதிக்குள் இன்று (நேற்று) மாலை 4.30க்கு இணைக்கப்பட்டுள்ளதென அறிவித்தது.

இதனிடையே, சதித்திட்டத்தால் நாட்டில் மின்சாரம் தடைப்பட்டதாக குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ள அரசாங்கம் முறையான விசாரணைகளை முன்னெடுக்குமாறு பொலிஸாருக்கு பணித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், ஊடக அறிக்கையொன்றை விடுத்திருந்த பொலிஸ் தலைமையகம், வெலிவிட்ட நுகர்வோர் அதிகார சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில், நேற்றுமுன்தினம் (02) இரவு ஏற்பட்ட மின்தடையால் மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர். இதுத்தொடர்பில் இலங்கை மின்சார சபையின் பிரதான பொறியியலாளர், கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். அதுத் தொடர்பிலான விசாரணை, கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாரிய தட்டுப்பாடு வரப்போகிறது

நாட்டில் கையிருப்பில் உள்ள அந்நியசெலாவணி தொடர்பான தகவல்களை நிதி அமைச்சர் சபைக்கு அறிவிக்க வேண்டும். இதனால் நாட்டில் அத்தியாவசிய பொருள்களுக்கு தட்டுப்பாடு பாரியளவில் ஏற்பட உள்ளது எனவும் அநுர குமார எச்சரித்தார்.

## தடை உத்தரவு நீடிப்பு

லங்கா உர நிறுவனம் மற்றும் கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனத்தினால் சீனாவின் சேதன பசளை கொடுக்கல் வாங்கல் தொடர்பில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



## எரிவாயு விநியோகம் இடைநிறுத்தம்

எரிவாயு அடுப்பு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பிலான பொலிஸ் விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமென அவர் தெரிவித்தார்.

இதற்காக, இதுவரை முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் நிறைவு செய்யப்பட்ட அறிக்கைகள் அமைச்சினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் கே.டி.எஸ். ருவன் சந்திர தெரிவித்தார்.




## மாவீரர் தின நிகழ்வுகளுக்கு தடை விதிப்போம்

என்னை கொலை செய்ய வந்த நபரையும் விடுதலை செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

ஜே.வி.பியின் நினைவு நாளும் மாவீரர்கள் தினமும் ஒன்றல்ல. அரசியல் மாற்றத்துக்காக ஜே.வி.பி ஆயுதம் ஏந்தி போராடினார்கள். ஆனால் புலிகள் நாட்டை பிளவுபடுத்தப் போராடினார்கள். யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவுக்கூருவதில் பிரச்சினை இல்லை. ஆனால் பிரபாகரனை பிறந்தநாளை வைத்துக்கொண்டு அதனை மாவீரர் தினமாகக் கொண்டாட முடியாது என்றார்.

இதேவேளை, மாவீரர் தினத்துக்கு அனுமதி வழங்கப்போவதில்லை என்கிற நிலைப்பாட்டிலேயே எமது கட்சியின் தலைமை இருக்கிறது. தென்பகுதியில் உள்ள சிங்கள மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்த வடக்கில் உள்ள சில அரசியல்வாதிகள் இதேபோன்ற நிகழ்வுகளின் பின்புலத்தில் இருக்கிறார்கள் எனவும் கூறினார்.




## விநியோகத்தை நிறுத்துமாறு அறிவுறுத்தல் கிடைக்கவில்லை

எத்தில் மெர்காப்டன் (ethyl mercaptan) வாசனை அளவை 14 ஆக உயர்த்தும் வரை விநியோகத்தை நிறுத்துமாறு இரண்டு காஸ் சிலிண்டர் விநியோகஸ்தர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

உள்நாட்டு எரிவாயு விநியோகத்தை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு இரு நிறுவனங்களுக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டதாக அவர் கூறினார்.




## நுழைந்தது ஒமிக்ரான்

இந்நிலையில், கொழும்பில் நேற்று (03) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், கருத்துரைத்த தொற்றுநோய் தடுப்பு பிரிவின் தலைமை அதிகாரி விசேட வைத்திய நிபுணர் சமித் கினிகே, "புதிய கொரோனா பிறழ்வு பதிவாகிய நாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகை தருவோரை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது" என்றார்.

"கடந்த ஒரு மாதத்துக்குள் நாட்டிற்கு வருகை தந்த வெளிநாட்டவர்கள் மற்றும் வெளிநாட்டிற்கு சென்று வந்த இலங்கையர்கள் தொடர்பான தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன" என்றும் விசேட வைத்திய நிபுணர் சமித் கினிகே கூறினார்.

இதேவேளை, அவர்களின் மாதிரிகள் பெறப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதற்கமைய, நைஜீரியாவிலிருந்து நாட்டிற்கு வருகை தந்த இலங்கையர் ஒருவருக்கு ஒமிக்ரோன் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் விசேட வைத்திய நிபுணர் சமித் கினிகே குறிப்பிட்டார்.

குறித்த நபர் ஏற்கனவே தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவரின் குடும்ப உறுப்பினர்களையும் தொடர்புகளை பேணியவர்களையும் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஒமிக்ரான் பிறழ்வை அடையாளம் காண்பதற்கான பரிசோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், கருத்துரைத்த பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் "நாடளாவிய ரீதியில் மாதிரிகளை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது" என்றார்.

அத்துடன், மாதிரிகளை பரிசோதனை செய்யும் நடவடிக்கைகள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தினை கேந்திரமாகக் கொண்டு முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

## ஷிராஸ் யூனுஸுக்கு பதவி வழங்கவில்லை

ஷிராஸ் யூனுஸ் (Shiraz Yunus) எனும் நபர் பிரதமரின் முஸ்லிம் விவகார இணைப்பாளராக பதவி வகிப்பதாக தெரிவித்து முன்வைக்கும் கருத்துகளுக்கும் பிரதமர் அலுவலகத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை எனவும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்துடன், குறித்த நபருக்கு பிரதமர் அலுவலகத்தில் எவ்வித பதவிகளும் வழங்கப்படவில்லை. அவர் வெளியிடும் கருத்துகள் தனிப்பட்ட ரீதியானதுடன், பிரதமர் அல்லது பிரதமர் அலுவலகம் அக்கருத்துகளை ஏற்கவில்லை என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கிறோம் என்றும் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.



## மது போதையில்....

அங்கு சென்ற ஏழு இளைஞர்களுக்கும் ஓமனியமடு விஹாரதிபதிக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டின் போது இளைஞனின் வயிற்றில் யானைகளை விரட்டப் பயன்படுத்தும் வெடில் பட்டதில் வெலிகந்த பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய ஹேரத் முதியன்செலாகே சிசிர குமார எனும் இளைஞன் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்தில் படுகாயமடைந்த விஹாரதிபதிபொலன்னறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுர வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்குச் சென்ற வாழைச்சேனை நீதிமன்ற பதில் நீதிபதி ஈ.எல். சஹாப்தீன் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர், மரணித்த இளைஞனின் உடலை பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டார்.

மது போதையில் இளைஞர்கள் அட்டகாசம் புரிந்ததில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது எனத் தெரிவித்த வாழைச்சேனை பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தனர்.

## எங்களுடைய உரிமையை எங்களுக்குத் தாருங்கள்

வடமலை ராஜ்குமார்

சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தை முன்னிட்டு மாற்றுத் திறனாளிகளுக்கான 2014 ஆம் ஆண்டு அரசாங்கம், தயாரித்த தேசிய செயல் திட்டத்தை அமுல்படுத்துமாறு வழியுறுத்தி மாற்றுத் திறனாளிகள் அமைப்பால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்று (03) இடம் பெற்றது.

வெக்கோ மாற்றுத் திறனாளிகள் அமைப்பின் ஏற்பாட்டில் திருகோணமலை 3 ஆம் கட்டை சந்தியில் இடம் பெற்ற இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் அதிகமான மாற்றுத் திறனாளிகள் கலந்து கொண்டிருந்ததை காணக் கூடியதாக இருந்தது.

திருகோணமலை மாவட்டத்தில் 04 பிரதேச செயலகப் பிரிவுகளான பட்டணமும் சூழலும் திருகோணமலை, குச்சவெளி, வெருகல் மற்றும் கந்தளாய் ஆகிய இடங்களில் ஒரே நேரத்தில் காலை 9.30 மணிக்கு இந்த போராட்டம் ஆரம்பித்து நடைபெற்றது.

"மாற்றுத் திறனாளிகளின் தொழில் உரிமையை பாதுகாப்போம்", "மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துவோம்" 3 சதவீத அரச தொழில் வாய்ப்பை உறுதிசெய்வோம்", "அரசே! மாற்றுத் திறனாளிகளுக்கான விசேட அடையாள அட்டையை வழங்கு", "பொது கட்டிடங்களுக்கான அனுகும் வசதிகளை ஏற்படுத்துங்கள்", "சைகை மொழி தெரிந்த அலுவலர்களை சேவைக்கு அமர்த்துங்கள்", "மாற்றுத் திறனாளிகளுக்கான சுகாதார சேவைகளை உறுதிப்படுத்துங்கள்", "மாற்றுத் திறனுடைய மாணவர்களின் கல்வி உரிமையை பாதுகாப்போம்" உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.



## மக்கள் கிளர்ச்சி ஆரம்பித்துவிட்டது

நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ ஆகியோர் தற்போதைய அரசாங்கத்தின் தூண்களாக இருக்க, தற்போது அவர்கள் ஆட்டம் காண்கிறார்கள் எனவும் கூறினார்.

ஆட்சிபீடம் மேற்றிய பெரும்பான்மை இன மக்களே தற்போதைய அரசாங்கத்தை திட்டித்தீர்க்கிறார்கள். இவ்வாறான நிலையில் பேரினவாதிகளின் ஆதரவைத் தக்க வைக்க, நாட்டில் இல்லாத பயங்கரவாத, இனவாத, மொழிப் பிரச்சினைகளை காட்டி அமைதியாக வாழும் இந்நாட்டு மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்த முயல்கிறார்கள் எனவும் கூறினார்.


எஸ்.டப்ளியூ. ஆர். டி.பண்டாரநாயக்கா தனிச் சிங்கள சட்டத்தை கொண்டுவருவதாகக் கூறி நாட்டில் பற்ற வைத்த தீ கடந்த 6 தசாப்தங்களாக கொழுந்துவிட்டு எரிகிறது. இப்போது 'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்கிற புதிய தீயை கொளுத்தியிருக்கிறீர்கள். இது எத்தனை தசாப்தங்களுக்கு பற்றி எரியப்போகிறதோ என்றார்.

## கனேடிய உயர்ஸ்தானிகரை கூட்டமைப்பினர் சந்தித்துப் பேச்சு

கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மக்கினனுக்கும் (David McKinnon)தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் கொழும்பிலுள்ள உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று (03) முற்பகல் சந்திப்பொன்று நடைபெற்றது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான கோ.கருணாகரம், எஸ். நோகராதலிங்கம் மற்றும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஊடகப்பேச்சாளர் சுரேந்திரன் குருசுவாமி உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

தற்போதுள்ள அரசியல் சூழ்நிலைகள், எதிர்கால நடவடிக்கைகள் பற்றி விளக்கமளிக்கப்பட்டதாக தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஊடகப்பேச்சாளர் சுரேந்திரன் குருசுவாமி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## கலிங்கமாகன் பற்றிய

# கொமரன்கடவெல கல்வெட்டு

கலாநிதி கா. இந்திரபாலா



(கடந்த வாரத் தொடர்ச்சி)

இலங்கையைக் கைப்பற்றியது தன்னுடைய சாதனையாகக் காலிங்கராயன் கூறுகின்றான். அதுமட்டுமல்லாது, விஜயவாகுவுக்குமுடிசூட்டியதும் தன்னுடைய சாதனையாகக் கூறுகின்றான்.

இதைச்செய்வதற்கு அவனுக்கு எப்படி அதிகாரம் கிடைத்தது? பொதுவாக, நம்பப்படுவதுபோல், விஜயவாகு தென்னிந்தியாவுக்குச் சென்று படைதிரட்டி வந்து, பொலன்னறுவையைக் கைப்பற்றியிருந்தால், அவன் திரட்டிய படையின் தளபதிக்கு முடிசூட்டும் அதிகாரம் இருந்திருக்காது. காலிங்கராயன் என்ற தளபதி சோழமன்னன் ஆணைப்படி இலங்கையைக் கைப்பற்றி, விஜயவாகுவுக்கு உதவிசெய்ய வந்த காரணத்தினாலேதான், வெற்றிக்குப் பின்னர் விஜயவாகுவுக்கு முடிசூட்டும் அதிகாரத்தை பெற்றிருந்தான் என்று வாதிக்க முடியும்.

### யாழ்ப்பாண இராச்சியத்தின் தொடக்கம்

பொலன்னறுவையில் ஆட்சிசெய்த கலிங்க இளவரசர்களும் இளவரசியரும் காலிங்கச் சக்கரவர்த்தி பரம்பரையைச் சேர்ந்தோர் என அவர்களுடைய கல்வெட்டுகள் தகவல் தருகின்றன. எடுத்துக்காட்டாக, நிஸ்ஸங்கமல்லன் தன் பெயரைக் கல்வெட்டுக்களில் நிஸ்ஸங்கமல்ல ‘காலிங்கச் சக்கரவர்த்தி’ என்று பொறித்துள்ளான்.

பொலன்னறுவையில் ஆட்சிசெய்த பிற கலிங்கர்களைப் போலவே கலிங்கமாகனாகிய விஜயவாகுவும் இதே பரம்பரையைச் சேர்ந்தவன் என்று கொள்ளலாம். இதனால், இவன் பெயர் விஜயவாகு காலிங்கச் சக்கரவர்த்தி என்றும் வழங்கியிருக்கும்.

பதிமூன்றாம் நூற்றாண்டு இலங்கையின் வரலாற்றைத் திசை திருப்பிய இரு பெரும் நிகழ்ச்சிகள் நடைபெற்ற காலம். இவற்றின் முக்கியத்துவத்தை உணர்வதற்கு இக்கூற்றினை இன்னொரு விதமாக அமைத்துக் கூறலாம். அதாவது, இந்த இரு நிகழ்ச்சிகளும் நடைபெற்றிருக்காவிட்டால் இலங்கையின் வரலாறு முற்றிலும் வேறாகச் சென்றிருக்கும்.

இந்த நிகழ்ச்சிகள் எவை? ஒன்று, பொலன்னறுவையின் வீழ்ச்சி. மற்றையது, வடக்கில் யாழ்ப்பாண இராச்சியத்தின் எழுச்சி. இவை இரண்டிலும் கலிங்கமாகனுக்குப் பங்கு உண்டு.

மாகனுக்கு இருந்த எதிர்ப்பின் விளைவாக அவன் நீண்ட காலம் பொலன்னறுவையில் ஆட்சி செலுத்த முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் அவன் வடக்கு நோக்கி நகர்ந்து, இறுதியில் தூரவடக்கில் தன் ஆட்சி பீடத்தை நிறுவினான். இவன் தொடக்கிவைத்த அரசு, பின்னர் யாழ்ப்பாண இராச்சியம் எனப் பெயர் பெறுகின்றது. இதன் தோற்றம் பற்றிய தெளிவான விவரங்கள் கிடைக்காத காரணத்தால், இதை மட்டுமே



ஊகிக்க முடிகின்றது.

### கங்க வம்சக் குறியீடுகள்

வடக்கில் ஓர் இராச்சியத்தை அமைத்த கலிங்கமாகனுடைய வரலாற்று எச்சங்கள் எதுவும் உண்டா? உண்டு. முதலாவதாக, அவன் பெயர் மறக்கப்படவில்லை. விஜய(வாகு) காலிங்கச் சக்கரவர்த்தி என்ற அவன் பெயர் விசய கூழங்கைச் சக்கரவர்த்தி ஆகி, யாழ்ப்பாண வரலாற்று மரபில் மறைந்து இருக்கிறது. இதனை இற்றைக்கு ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு முன்னர் சுவாமி ஞானப்பிரகாசர் எடுத்து விளக்கியுள்ளார். ஏட்டுப் பிரதியின் எழுத்தில் காலிங்கச் சக்கரவர்த்தி என்பது கூளங்கச் சக்கரவர்த்தி ஆகி, பின்னர் கூழங்கைச் சக்கரவர்த்தி ஆகியது என்பது அவர் விளக்கம்.

கங்கராஜா எனத் தன் கங்க வம்ச உறவினைப் பிரகடனப்படுத்திய காலிங்க விஜயவாகு வடக்கில் ஆட்சி செலுத்திய போது கங்க வம்சக் குறியீடுகள் சிலவற்றை அங்கு புகுத்தியிருந்தான். சிறப்பாக, கங்க வம்சத்தினர் பயன்படுத்திய நந்தியும் பிறையும் (இடபலாஞ்சனை) யாழ்ப்பாண அரசின் சின்னமாகியது. கீழைக் கங்கர்கள் செப்பேடுகளின் முத்திரையில் இதனைப் பயன்படுத்தினர்.

யாழ்ப்பாண அரசர்கள் தங்கள் நாணயங்களிலும் கொடியிலும் இச்சின்னத்தைப் பயன்படுத்தினர். வடக்கில் அமைக்கப்பட்ட புதிய ஆட்சிபீடம் சிங்கைநகர் எனப்பட்டது. இது கங்க வம்சத்தினருடைய ஸிங்ஹபுரத்தை மனதில் வைத்து இடப்பட்டபெயராக (ஸிங்ஹநகர்) கொள்ளலாம்.

யாழ்ப்பாணத்தில் ஆட்சி நடத்திய மன்னர் கங்க வம்சத்தவர் என்பது மக்கள் மத்தியில் பதிந்திருந்தது என்பதற்கு அங்கு எழுதப்பட்ட தமிழ் நூல்களில் சான்று உண்டு. இவற்றில் சில சந்தர்ப்பங்களில் யாழ்ப்பாணத்து மன்னர் கங்கை ஆரியர், கங்கநாடன் என்று வர்ணிக்கப்பட்டுள்ளனர். மன்னனுக்கு உதவிய சில உயர் குலத்தவர் கங்கா குலத்தவராகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இவ்வாறாக, கங்க ராஜகாலிங்க விஜயவாகு பற்றியும் குலோத்துங்க சோழ காலிங்கராயன் பற்றியும் தகவல் தரும் கொமரன்கடவெலக் கல்வெட்டு வரலாற்று முக்கியத்துவம் உள்ள ஒரு கல்வெட்டாகக் காணப்படுகின்றது.



# “இப்படித்தான் இருக்கிறது எங்கள் வாழ்க்கை”



சுப்பிரமணியம் பாஸ்கரன்



யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அநேகமான பிரதேசங்களில், அடிப்படை வசதிகள் இல்லாத நிலை காணப்படுகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி உள்ளிட்ட நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் இவ்வாறு அதிக தேவையுடைய நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்கள் காணப்படுகின்றன.

இதில் ஒரு கிராமம் தான் கண்ணகை புரம் என்ற விவசாயக்கிராமம். ஸ்கந்தபுரம் சந்தியிலிருந்து எட்டுக் கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இந்தக்கிராம மக்கள், யுத்த காலத்தில் வாழ்ந்தது போன்றே தாம் வாழ்வதாகவும், இங்கு எதுவித அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தித்தரப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றான அக்கராயன்குளத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விவசாயக் கிராமமான கண்ணகைபுரம் கிராமம் பரந்த ஒரு பிரதேசமாகும்.

இக்குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், ஆங்காங்கே மேலும் பல குடியிருப்புகள் உருவாக்கப்பட்டன. இவ்வாறு கண்ணகைபுரம் கிராமத்தில் தற்போது 324 குடும்பங்களைச் சேர்ந்த 1,154 பேர் வரையில் வாழ்ந்து வருகின்றனர்.

ஸ்கந்தபுரம் சந்தியிலிருந்து கரும்புத்தோட்டம் ஊடாகச்செல்லும் போது, செம்மண் புழுதியும் குன்றும் குழியுமாக மக்கள் பயணிக்கமுடியாத பாதையொன்றின் வழியாக, பிற்பகல் நான்கு மணியளவில் சில பாடசாலை மாணவர்கள் கால்நடையாகவும் சைக்கிளிலும் பயணித்துக்கொண்டிருந்தனர்.

குறித்த மாணவர்கள், சூரிய வெளிச்சம் பரவுவதற்கு முன்னரே, தினமும் காலை ஆறு மணிக்கு முன்னர் வீட்டிலிருந்து கால்நடையாகப் புறப்பட்டு பாடசாலைக்கு சென்று, பிற்பகல் பாடசாலையிலிருந்து வீட்டுக்கும் செல்கின்றார்கள். இங்கு போக்குவரத்து வசதிகள் எதுவும் இல்லை.

“ஒவ்வொரு நாளும் பாடசாலைக்குச் சென்று வருவதில் கடும் கஸ்ரம். மழைக் காலங்களில் இதைவிடவும் பெரும் பிரச்சினை. இப்படித்தான் எங்களுடைய கல்வி வாழ்க்கை போகின்றது. இதை யாரும் கண்டுகொள்வதில்லை. நாங்கள் சீராகப் பயணிப்பதற்கு ஒரு ஒழுங்கான பாதையில்லை. இப்போது குன்றும் குழியும் புழுதியுமாகக் காணப்படும் இந்த வீதியால் போய் வரும் போது, எங்களுடைய சீருடைகள் அனைத்துமே அழுக்கடைக்கின்றன. வீட்டுக்குப் போய் இந்தச் சீருடையை தோய்த்துக் காயவைத்து மறுநாள் இதையே போடவேண்டும். இதைவிட மழைக் காலங்களில், பாடசாலைக்கு பாதணிகளையோ சீருடைகளையோ இந்தப் பாதையால் போட்டுச்செல்ல முடியாது” என இந்த மாணவர்கள் தெரிவித்தனர்.

இந்த மாணவர்கள், கண்ணகை புரம், முட்கொம்பன் ஆகிய கிராமங்களிலிருந்து தினமும் கால்நடையாகவும் சைக்கிள்களிலும் முட்கொம்பன், அக்கராயன் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு சென்று வருகின்றார்கள்.

குறித்த கிராமத்துக்குள் நுழையும் போது, ஆங்காங்கே வானுயர தென்னை மரங்களும் சிலபல பயன்தரு மரங்களும் காட்சி கொடுக்கின்றன.

இக்கிராமத்துக்கான பிரதான வீதி, நீரப்பாசன திணைக்களத்துக்குச் சொந்தமானதாகக் காணப்படுகின்றபோதும், இதுவரை இந்த வீதி புனரமைக்கப்படாது பாரிய குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

பருவமழை காலங்களில் பல இடங்களில், வீதியைக் குறுக்கறுத்து வெள்ளநீர் பாய்வதால் போக்குவரத்துக்கள் செய்யமுடியாத நிலையும் காணப்படுகின்றது.

இந்தப் பகுதியில் உள்ள மக்கள், தா ங்கள் எந்தத்தேவைகளுக்கு போவதாக இருந்தாலும் அக்கராயனுக்கோ ஸ்கந்தபுரத்திற்கோ செல்லவேண்டும். ஆனால், போக்குவரத்து வசதிகள் இல்லை; சீரான வீதி இல்லை. இவையெல்லாம் தாண்டி ஓட்டோ பிடித்துச்செல்வதாயின் கிட்டத்தட்ட ஆயிரம் ரூபாய் செலவாகும் என்கிறார்கள்.

“இப்படித்தான் எங்களுடைய கிராமம் இருக்கின்றது. மீள்குடியேறியதில் இருந்து இன்றுவரைக்கும் இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறுதான் நாங்கள் கேட்கின்றோம்; இது எவர் காதுக்கும் கேட்டதாக இல்லை. முக்கிய பொறுப்பிலிருப்பவர்கள் எங்கள் கிராமத்தில் ஓரிரு நாள்கள் தங்கியிருந்து, எங்கள் கஸ்ரங்களை அனுபவித்துப் பார்க்கவேண்டும்” என அந்த மக்கள் தங்களுடைய ஆதங்கத்தைத் தெரிவிக்கின்றனர்.

ஒரு நீண்ட பிரதேசமாகக் காணப்படுகின்ற இந்தக்கிராமத்தில், கண்ணகைபுரம் மேற்கு, கண்ணகைபுரம் மத்தி, கண்ணகைபுரம் கிழக்கு என மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளதுடன், மூன்று கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மூன்று மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் என ஆறு வரையான அமைப்புகளும் கமக்கார அமைப்புகள் எனப் பல்வேறுபட்ட அமைப்புகள் இருக்கின்றன.

இருந்தபோதும், இந்த அமைப்புகள் ஒரு வலுவற்ற அமைப்புகளாக இருப்பதனால் அபிவிருத்திகளில் புறக்கணிக்கப்படுவதாகவும் ஏனைய பிரதேசங்களின் அபிவிருத்திகள் போன்று தங்களுடைய கிராமத்தை அபிவிருத்தி செய்யப்படவேண்டுமென இந்தப்பகுதியிலுள்ள பலர் தெரிவித்திருந்தனர்.

மருத்துவ வசதி, கல்வி வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு அடுத்து கிராமங்களை நோக்கி நகர வேண்டிய தேவை உள்ளபோதிலும், இவ்வாறான கிராமங்களுக்கான போக்குவரத்து சேவைகள் அல்லது போக்குவரத்துக்காக பயன்படுத்துகின்ற வீதிகள் சீராகச் செப்பனிடப்பட வேண்டுமென்பது இந்த மக்களின் கோரிக்கையாகும்.







# போதையால் பாதை மாறும் மாணவர் சமுதாயம்

சி. அருள்நேசன்
கல்வியியல் பட்டதாரி
கிழக்குப் பல்கலைக்கழகம்



இன்றைய உலகில் தொழில்நுட்பத்தை நாடிச் செல்லும் மாணவர்கள் மத்தியில், நாம் எதிர்பாரக்காத பிரச்சினைகளை, மாணவர்கள் சந்தித்து வருகின்றார்கள். இதில் குறிப்பாக, கல்வி கற்கும் பருவத்திலுள்ள மாணவர்கள் போதைக்கு அடிமையாகும் பிரச்சினை பலராலும் பேசப்படுகின்றது.

மாணவர்கள் தங்களது இளமைப் பருவத்தில் நடத்தும் அட்டகாசங்களைப் பற்றி சிந்திக்கின்றார்களே தவிர, அதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி சிந்திப்பதில்லை. இதன் விளைவாகவே, போதைக்கு ஆளாகின்றார்கள். திடகாத்திரமாக ஆரோக்கியமாக, ஆளுமையுள்ளவர்களாக வளர்வதற்கு போதையும் தீய நடத்தைகளும் தடைகளாக இருக்கின்றன என்பதை உணராமல் இருக்கின்றார்கள்.

எந்தவொன்றையும் அனுபவித்துப் பார்க்க வேண்டும் என்ற ஆவலும் ஆசையும் சில நேரம் அவர்களது அழிவுக்கே காரணமாகி விடுகின்றன. நண்பர்களுடன் பழகும்போது சிகரட் புகைத்தல், பியர் குடித்தல் என்ற பழக்கத்துடன் பீடா, பாபுல், பான்பராக், மாவா, ஸாதா என்ற பாவனைக்கு ஆளாகி, இறுதியில் எல்லா போதைக்கும் அடிமையாகி விடுகின்றார்கள். தற்போது சிறுபிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும் மருந்துகளையும் போதைக்குப் பயன்படுத்துகிறார்கள். அத்துடன் மூக்குத்தூளையும் பயன்படுத்துகிறார்கள்.

## போதை என்றால் என்ன?

போதை என்றால் என்ன? அதன் விபரீதம் எப்படிப்பட்டது என்பதை அறியாமலே போதை பாவனையில் மாணவர்கள் ஈடுபடுகின்றார்கள். போதை என்பது தன்னிலை மறக்கச் செய்தல்; உடல்-உள பாதிப்புகளை ஏற்படுத்தல் என்பனவாகும். போதையை பயன்படுத்தியதும் சுயசிந்தனையை இழக்கின்றான்; மயங்குகின்றான். உடல் பலவீனமடைகின்றது; உளம் கெட்டு விடுகின்றது. தன்னால் உறுதியாக நிற்க முடியாமல் ஆடி அசைந்து விழுகின்றான். அதன் பின்னர் அவனுக்கு ஏற்படும் எந்தவொரு விடயத்தைப் பற்றியும் அறியாமல் இருக்கின்றான்.

## பாவனைக்கான காரணங்கள்

மாணவர்களும் இளைஞர்களும் போதை பாவனைக்கு ஆளாகுவதற்குப் பிரதான காரணங்கள் பின்வருமாறு:

1. வீட்டுச் சூழல்
2. சமூக சூழல்
3. குடும்பப் பிரச்சினை
4. போட்டி சூழலுக்கு முகம்கொடுக்க முடியாமை
5. ஊடகங்கள்

## வீட்டுச் சூழல்

வீட்டுச் சூழலிருந்து பல பிள்ளைகள் போதை பாவனைக்கு ஆளாக்குகின்றார்கள். தந்தை சிகரட் புகைப்பவராக இருந்தால், அந்த சிகரட்டை வாங்குவதற்கு பிள்ளையிடம் பணம் கொடுத்து வாங்கிக் கொள்கிறார். அந்தப் பிள்ளை தந்தையுடைய புகைத்தல் ஸ்டைலை பார்த்து நாளடைவில் அதனை திருட்டுத் தனமாக புகைக்க ஆரம்பிக்கின்றது. வீட்டில் விருந்துபசாரத்தின்போது பியர் மற்றும் மது பாவிக்கப்படும்போது பிள்ளை அவைகளை சக நண்பர்களுடன் சேர்ந்து பயன்படுத்த ஆரம்பிக்கின்றது. 'இவை நல்லவை; பயன்படுத்திக் கொள்வதில் தவறில்லை' என்ற எண்ணம் பிள்ளைகள் மத்தியில் உருவாக்கப்படுவதால் விளைவுகளைப் பற்றி அஞ்சாமல் பயன்படுத்திக் கொள்ள ஆரம்பிக்கின்றார்கள். அதுபோல் வீட்டுச் சூழலில் ஆன்மீகம் இல்லையாயின் நிலைமை மோசமாகி விடும்.

## சமூக சூழல்

வீட்டுச் சூழலில் பயன்படுத்திய போதை பொருட்களை பிள்ளைகள் நாளடைவில் சமூக சூழலில் சக தோழர்களுடன் பழகிக் கொள்ள முனைக்கின்றது. சிலவேளை வீட்டுச் சூழலில் சிகரட் புகைத்தல், மது அருந்துதல் போன்றவை இல்லாவிட்டாலும் சமூக சூழலில் அவை விற்பனைக்கு இருக்குமாயின், அவை பயன்படுத்தக்கூடிய பிள்ளைகள் இருப்பார்களாயின் அப்பிள்ளைகளுடன் பழகக் கூடியவர்களும் போதைக்கு ஆளாகிவிடுவார்கள்.

பாடசாலை மாணவர்கள் போதைக்கு ஆளான பல சம்பவங்களில் ஒன்று தான் 'பிக்மெச்' என்ற விளையாட்டுப் போட்டியின்போது நடைபெறுகின்றது.

## குடும்பப் பிரச்சினை

குடும்பத்தில் எல்லா பிள்ளைகளிடமும் பெற்றோர் சரிசமமான அன்பு, பாசம் காட்டி அரவணைக்க வேண்டும். தாழ்வு மனப்பான்மை வளரவிடாமல் காத்துக் கொள்ள வேண்டும். பெற்றோரிடம் உரிய அன்பும் அரவணைப்பும் கிடைக்காத சந்தர்ப்பத்தில் பிள்ளைகள் தங்களுக்கு ஏற்பட்ட கவலையை போக்க, போதையை பயன்படுத்தி தீர்வுகாண முனைகின்றனர். அதுபோல் பெற்றோர் பிரிந்து வாழ்வார்களாயின் அதனால் பாதிப்படைபவர்கள் பிள்ளைகள், அப்பிள்ளைகள் அப்பிள்ளை விரக்தி காரணமாக போதைக்கு அடிமையாகுவர்.

சில சந்தர்ப்பத்தில் தாயும் தகப்பனுக்கும் பிரச்சினை தோன்றும் போது தந்தை சிகரட் புகைத்தல், மது அருந்தல் போன்ற காட்சியை பிள்ளை கண்டால் தனக்கு ஏற்படும் பிரச்சினைக்கு இதுதான் தீர்வு என பிள்ளையும் பாவனைக்கு ஆளாகும்.

## போட்டி சூழலுக்கு முகம் கொடுக்க முடியாமை

பாடசாலை வாழ்க்கையிலும் ஏற்படும் சவால்களுக்கும் போட்டிகளுக்கும் முகம் கொடுக்க முடியாமல் தோல்வி மனப்பான்மைக்கு ஆளாகும்போது போதையை நாடுகின்றனர். பரீட்சையில் தோல்வி; பொதுவான போட்டி நிகழ்ச்சிகளில் தோல்வி; படிக்க முடியா பிரச்சினை எனும் போது போதையினை பயன்படுத்துகின்றனர்.

## ஊடகங்களின் தாக்கம்

மேலே கூறப்பட்ட காரணிகளுக்கு உடந்தையாக இருப்பதே ஊடகமாகும். எந்தவொரு பிரச்சினையின் போதும் அதற்கு முகம் கொடுக்க முடியாதபோது போதையை பயன்படுத்துவதையே ஊடகம் முக்கியமான செய்தியாக காட்சியப்படுத்துகின்றது. காதல் தோல்வி, குடும்பத்தகராறு, வாழ்வில் தோல்வி, வேலையின்மை, விரக்தி, நண்பர்களுடன் விரிசல் போன்ற காட்சிகளில் கதாநாயகன் நாடக்கூடிய முதல் தீர்வு சிகரெட் புகைப்பது, மது அருந்துவது என்பதைத்தான் சினிமா மற்றும் நாடகங்களில் காட்டப்படுகின்றது. இது போல் கதாநாயகன் பல்வேறு ஸ்டைகளில் புகைத்து காட்டுவதும் இதற்கான மற்றொரு காரணமாகும்.

## போதையால் ஏற்படும் விளைவுகள்

பிள்ளைகள், மாணவர்கள், பெரியவர்கள் போதைக்கு அடிமையாகும்போது குடும்பத்திலும் சமூகத்திலும் பல்வேறு பிரச்சினைகள் உருவாகின்றன. குடும்பத்திற்குள் ஒற்றுமை குலைந்து விடுகின்றது. அவநம்பிக்கை ஏற்படுகின்றது. முரண்பாடுகள் தோற்றம் பெறுகின்றது. வறுமை ஏற்படுகின்றது. குடும்பத்திற்கென்று இருந்த மரியாதை, கௌரவம் இழக்கப்படுகின்றது. இதனால் மனச்சோர்வு ஏற்பட்டு விரக்தி நிலைக்குச் செல்கின்றனர்.

பிள்ளைகளுடைய எதிர்கால கனவுகள், இலட்சியங்கள் நாசமாகின்றன. இலக்கில்லாமல் வாழ்வு அழிந்து விடுகின்றது. புத்தகங்களை சுமந்து செல்ல வேண்டியவர்கள் பல்வேறுபட்ட நோய்களை சுமந்தவர்களாக நடமாட ஆரம்பிக்கின்றார்கள். பதினாறு மற்றும் பதினெட்டு வயதை அடையும் போதே வாழ்க்கையை தொலைத்து விடுகின்றனர்.

## போதைக்கு அடிமையானவர்களை அடையாளம் காணும் வழி

பிள்ளைகள் பழகக் கூடிய புதிய, பழைய நண்பர்களை அடையாளம் காண வேண்டும். ஆரம்பத்தில் பிள்ளை பழகிய நண்பர்கள் யார்? அவர்களுடன் மேற்கொள்ளும் நட்பு எத்தகையது? ஏற்பட்டு வரும் மாற்றம் எத்தகையது என்பதை பெற்றோர் அறிய வேண்டும். அவர்களது செல்போன் பாவனை எத்தகையது? அதிகமாக பேசுபவர்கள் யார் என்பதையும் அறிய வேண்டும்.

சிலவேளை பிள்ளை அல்லது மாணவன் பழைய நண்பர்களின் நட்பு மோசமானது எனக்கருதி புதிய நண்பர்களை தேடிக் கொண்டு, திசை மாறியும் போகலாம். இதில் பெற்றோர் அவதானமாகச் செயற்பட வேண்டும்.

பாடசாலைக்கு போய்விடும் நேரம் மேலதிக வகுப்புக்கு போய் வரும் நேரம், இதில் ஏற்படும் மாற்றங்கள், பொழுது போக்குகளில் ஈடுபட்டவர்கள் ஒதுங்கிக் கொள்வது, நல்ல பழக்க வழக்கங்களை குறைத்துக் கொள்வது, விருப்பான ஆகுமான நல்ல விடயங்களில் ஆர்வம் குறைந்து வருவது, சுத்தம் பேணாமல் இருப்பது, வாயில் துர்வாடை வீசுவது போன்ற விடயங்களை காணப்படுமாயின் பெற்றோர் கவனம் செலுத்த வேண்டும்.

அதுபோல் வீட்டில் சின்னச்சின்ன பொருட்கள் காணாமல் போவது அல்லது பணம் காணாமல் போவது படிப்பில் ஆர்வம் குறைவது, அடிக்கடி மறதி ஏற்படுவது, பதற்றமாகவும் ஆக்ரோஷமாகவும் நடந்து கொள்வதும் காணப்படுமானால் பெற்றோர் கண்டிப்பாக பிள்ளைகள் விடயத்தில் மிக அவதானம் செலுத்த வேண்டும்.

பிள்ளையின் மீது அதிக அன்பு காட்டி ஏமாந்து போகாமலும் அதிக கோபத்தையும் வெறுப்பையும் காட்டி ஒதுக்கி விடாமலும் நடுநிலைமையுடன் நடந்து பிள்ளையின் வாழ்வை சீர் செய்ய முனைய வேண்டும். எல்லா பிரச்சினைக்கும் தீர்வு உண்டு. அதனை சரியாக தேடிக் கொள்ளவே வழிகாண வேண்டும்.



# சாரணர் சேவை நாட்டுக்குத் தேவை

க. விஜயரெத்தினம்



1907ஆம் ஆண்டு சாரணியத்தின் தந்தை பிரபு பேடன் பவல் பிரபுவால் உருவாக்கப்பட்ட சாரணிய இயக்கமானது, 1912ஆம் ஆண்டு பிரான்சிஸ் ஜோர்ச் ஸ்டீபன்சனால் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து, 1917ஆம் ஆண்டு, மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டு. மெதடிஸ்த மத்திய கல்லூரி, புனித மிக்கேல் கல்லூரி ஆகியவற்றில் ஒரே நாளில் ஸ்தாபிக்கப்பட்ட சாரணிய செயற்பாடானது, பல தடைகளை கடந்து இயங்கி, மாவட்டம் முழுவதும் சாதனை படைத்து, பரிணாமம் அடைந்து சாரணியத்தின் சமூக சிந்தனை, சமூகத்துக்குக் கிடைத்துக்கொண்டு வருகின்றது; சாரணியத்தை உருவாக்கியவரின் நோக்கம் வலுப்பெற்றுள்ளது.







இன்று, மட்டக்களப்பு மண்ணில் 100 ஆண்டுகளை கடந்து, பல சவால்களுக்கு மத்தியில் மாவட்ட சாரணிய செயற்பாடு காணப்பட்டாலும், மக்களின் மனத்தில் நிலையானதோர் எண்ணக்கரு இல்லாமல், பலதரப்பட்ட விமர்சனங்களுக்கு மத்தியிலே இன்னும் இயங்கிக் கொண்டு இருக்கின்றது. அப்படிப்பட்ட சூழ்நிலையில், 2014ஆம் ஆண்டு பெண்களுக்குரிய சாரணியமானது, பலதரப்பட்ட விமர்சனங்களுக்கு மத்தியில், முன்னாள் மாவட்ட சாரண ஆணையாளர் பொன். ஆனந்தாஜாவின் தலைமையில் பெண்களுக்கான உதவி மாவட்ட சாரண ஆணையாளர் திருமதி. சிந்துஜா பிரசாத், பயிற்சிக்குப் பொறுப்பான உதவி மாவட்ட சாரண ஆணையாளர் ஏ. உதயகுமார், நிகழ்ச்சித் திட்டத்துக்குப் பொறுப்பான உதவி மாவட்ட சாரண ஆணையாளர் ஐ. கிறிஸ்டி ஏனைய உதவி மாவட்ட சாரண ஆணையாளர்கள், சாரண தலைவர்களின் பங்களிப்புடன் மட் / மகாஜனா கல்லூரியில் அன்றைய அதிபர் திருமதி ராஜகுமாரி கனகசிங்கம், சாரண தலைவர் திருமதி. எட்வேட் ஆசிரியையின் மூலம் ஆரம்பிக்கப்பட்டது.

அதன் பின்னர், முறையே மட் /புனித சிசிலியா பெண்கள் பாடசாலையில் அருட் சகோதரி கவிதா அம்மணி மூலமும், மட் / வின்சன்ட் பெண்கள் உயர் தர பாடசாலையில் திருமதி சிந்துஜா, ஜெசானி ஆசிரியர்கள் மூலமும் மட் /திக்கோடை மகா வித்தியாலயத்தில் திருமதி சர்மிளா புட்கரன் ஆசிரியை மூலமும் அந்தந்த பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டு, மிகவும் சிறப்பாக செயற்பட்டு வருகின்றது.

இப்படி ஆரம்பிக்கப்பட்ட சாரணிய செயற்பாட்டில், உற்றார் உறவினர்களின் விமர்சனங்களைக் கடந்து, தமது பிள்ளைகளை முதன் முறையாக இவ்வெள்ளோட்டத்தில் இணைத்த பெற்றோர்கள் மிகவும் போற்றுதற்கு உரியவர்களாகத் திகழ்கின்றார்கள். அவர்கள் துணிந்து செயற்பட்டதன் பலன் இன்று கிடைத்துள்ளது என்றே சொல்ல வேண்டும்.

பெண்கள் சாரணியமானது, எமது சமுதாய கட்டமைப்புடன் நோக்கும் போது, ஒரு சிறந்த செயற்பாடாகச் செல்லுமா? அல்லது, இடை நடுவே நின்று விடுமா என்ற அச்சம், அனைவர் மனத்திலும் காணப்பட்டது. அதனை சாரண ஆசிரியர்களும் பெற்றோர்களும் இணைந்து மிகவும் இலாவகமாக கையாண்டு வெற்றியும் பெற்றுள்ளார்கள்.

சாரணியம் என்பது, கடல் போல் பரந்த செயற்பாடாகும். அதில் செயற்படுவதே பெருமை மிகுந்த விடயமாகும். இருப்பினும் 18 வயதுக்குக் கீழ் உள்ள சாரணர்களுக்கு எமது நாட்டின் உயரிய விருதான ஜனாதிபதி சாரண விருதினை வெல்ல முடியும். அதனை வெல்லுவதற்கு ஒரு சாரணர் குறைந்தது 36 மாத கால சாரண சேவையில், பல சவால்களையும் விருதுகளையும் வென்றிருக்க வேண்டும்.

இவ்வாறு 2015ஆம் ஆண்டு சாரணியத்தில் இணைந்த எமது பெண் சாரணர்கள் பல சவால்களைக் கடந்து சிறப்பாக செயற்பட்டுள்ளார்கள். 'முதல் கோணல் முற்றும் கோணல்' என்று கூறுவார்கள். அப்படி கோணாமல் முறையான வழிகாட்டலுடன் சரியான திசையில் சென்று ஜனாதிபதி சாரண விருதைப் பெற்று, வரலாற்றில் தடம் பதித்து, அவர்களுக்கு பின்னால் வரும் பெண் சாரணர்களுக்கு வழிவகுத்துக் கொடுத்துள்ளனர். அந்த வகையில் இம் முறை மட் /புனித சிசிலியா பெண்கள் பாடசாலையில் இருந்து ஆறு பேரும், மட் /வின்சென்ட் மகளிர் உயர்தர பாடசாலையில் இருந்து ஒருவரும் மட் /திக்கோடை மகா வித்தியாலயத்தில் இருந்து ஐந்து பேருமாக மொத்தம் 12 பெண் சாரணர்கள் உட்பட 26 சாரண மாணவர்கள் முதன்முறையாக ஜனாதிபதி விருதினை வென்றுள்ளார்கள்.


இவ்விருது வழங்கும் விழாவான,து கோலாகலமாகக் கொண்டாடப்பட்டிருக்க வேண்டிய நிகழ்வாகும். இருப்பினும் கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக, சிறிய நிகழ்வாகவே நடைபெற்றது. இவர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவம் மட்டுப்படுத்தப்பட்ட பிரதிநிதிகளுடன், மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் வளாகத்தில் நவம்பர் மாதம் 13ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட செயலாளரும் மாவட்ட சாரண தலைவருமான க. கருணாகரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் இலங்கை சாரண சங்கத்தின் பிரதம ஆணையாளர் வழக்கறிஞர் ஜனப்பிரித் பெர்னாண்டோ, மட்டக்களப்பு வலய கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார், மட்டக்களப்பு தலைமை பொலிஸ் நிலையத்தின் தலைமைய பொறுப்பதிகாரி சி.ஐ. ஹெட்டியாராச்சி, மாவட்ட சாரண ஆணையாளர் வி. பிரதீபன், உதவி மாவட்ட சாரண ஆணையாளர்கள், சாரண தலைவர்கள், அதிபர்கள், பெற்றோர்கள், சாரண நலன் விரும்பிகள் ஆகியோர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

விருது பெற்ற அனைத்து சாரணர்களும் நாளைய தலைவர்களாக உயர வாழ்த்துவதோடு சாரணர்களின் சேவை இடை நடுவில் நிறுத்தாமல் தொடர்ச்சியான சேவையை மட்டக்களப்பு மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

இதன்போது, மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் க. கருணாகரன் தனது தலைமையுரையில் கூறியதாவது, "மட்டக்களப்பில் இன்று மாவட்டம் முழுவதும் சாரண மாணவர்கள், சாரண குழுக்கள், சாரண ஆணையாளர், மாவட்ட சாரண ஆணையாளர்களுடன் பெரியதொரு சாரண சேவையாளர்கள் உருவாக்கப்பட்டுள்ளார்கள். உண்மையில் சாரண மாணவர்கள் பாக்கியசாலிகள்தான். இவர்கள் சாரணியத்தில் ஈடுபாடு கொண்டு, தற்போது ஜனாதிபதி விருதை பெற்றிருக்கின்றார்கள். விருதுகள் பெறுவது சாதாரண விடயமல்ல. இவர்கள் கடுமையான முயற்ச்சி, பயிற்ச்சி, தலைமைத்துவப் பண்பு, அறிவுத் திறன் விருத்தி கொண்ட மனப்பாங்கு, அர்ப்பணிப்பான சேவைகள் மூலம் சாரணிய மாணவர்களுக்கு கிடைத்த பரிசாகும். உண்மையில் சாரணியத்திற்கு அனுப்பி வைத்த பெற்றோர்களை நான் பாராட்டுகின்றேன். இன்றைய சமூகத்தின் எதிர்பார்ப்புகளை, ஜனாதிபதி விருது பெற்ற சாரண மாணவர்கள் தங்குதடையின்றி நிறைவேற்றிக் கொடுப்பார்கள். இவர்களை இடையில் நிறுத்திவிடாமல் தொடர்ச்சியாக இவர்களின் சேவையை சமூகம் எதிர்பார்த்துக் கொண்டிருகின்றது. எனவே பெற்றோர்கள் அனைவரும் சாரண மாணவர்களை சாரணியத்துக்கு தட்டிக்கொடுத்து வெற்றி காணுங்கள்" எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இலங்கை சாரணர் சங்கத்தின் பிரதான ஆணையாளரும் பிரபல சட்டத்தரணியுமான ஜனபிரித் பெர்னாண்டோ கூறியதாவது: "நாட்டுக்கு முன்மாதிரியான நல்ல தலைவர்களையும் நற்பிரஜைகளையும் உருவாக்கும் இடமாக சாரணியம் திகழ்கின்றது. சாரணியத்துக்குள் மாணவர்கள் உள்வாங்கப்பட வேண்டும். மாணவர்களை முன்மாதிரியான தலைவர்களாகவும் நற்பிரஜைகளாக்கும் பொறுப்பு ஒவ்வொரு பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்களின் வழிகாட்டலில்தான் இருக்கின்றது. நல்ல தலைவர்களை உருவாக்குவதற்கும் வளத்தெடுப்பதற்கும் பெற்றோர்களின் ஒத்துழைப்பு அவசியமாக இருக்கின்றது" என்றார்.



# திருகோணமலையில் சர்வதேச கப்பல்களின் அட்டகாசம்



எப். முபாரக்

**திருகோணமலை கடற்பரப்பில் நங்கூரமிடும் சர்வதேச கப்பல்களால், சிறு மீன்பிடி தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றார்கள். சாம்பல்தீவு, சல்லி பிரதேச மீனவர்களே இவ்வாறு பாதிப்படுகின்றனர்.**





வெளிநாடுகளில் இருந்து வரும் பாரிய கப்பல்கள், திருகோணமலை கடற்பரப்பில் நங்கூரமிட்டு மாதக்கணக்கில் நிற்கின்றன. அவை, திருகோணமலை கடற்பரப்பில் குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் நங்கூரமிடாமல், கடற்பரப்பில் தாம் விரும்பியவாறு நங்கூரமிடுவதால் சிறு மீன்பிடி தொழிலாளிகள், மீன் பிடிக்க முடியாமல் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை துறைமுகத்திலிருந்து பொருட்களை ஏற்றிச் செல்லுகின்ற சர்வதேச கப்பல்களும் துறைமுகத்தில் பொருட்களை இறக்குவதற்காக வரும் கப்பல்களும் இவ்வாறு தரித்து நிற்பதால், மீனவர்களின் வாழ்வாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை பகுதிக்கு விஜயம் செய்கின்ற அமெரிக்கா, இந்தியா, மாலைதீவு போன்ற நாடுகளின் கப்பல்கள் நங்கூரமிடப்பட்டிருக்கும் கடற்பரப்பில், தோணிகள், சிறு படகுகளில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற மீனவர்களை, மீன்பிடிக்க விடாமல் துரத்தியடிக்கும் சம்பவங்கள் இடம்பெறுவதால், மீனவர்கள் தமது தொழிலைச் செய்ய முடியாமல், பல அசௌகரியங்களுக்கு தினமும் முகம்கொடுத்து வருகின்றார்கள்.

குறிப்பாக, "நாங்கள், மீன்பிடிப்பதற்காக கடலுக்கு செல்லும் போது விரட்டியடிக்கப்படுகின்றோம். அதையும் மீறி மீன்பிடியில் ஈடுபட்டால், இலங்கை கடற்படைக்கு அறிவித்து, அவர்கள் மூலம் மீன் பிடிக்க தடை விதிக்கப்படுகின்றது" என்று ஏக்கம் தெரிவிக்கின்றனர்.

அவ்வாறு மீன் பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டால், சட்டவிரோத வலைகளைப் பயன்படுத்தி மீன் பிடித்தமை, அத்துமீறி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டமை போன்ற பொய்க் குற்றச்சாட்டுகளில் கடற்படையினரால் கைது செய்யப்படுவதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டு, துறைமுக பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டு, துறைமுக பொலிஸாரால் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுவதாகவும் பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கப்பல்களினால், மட்கோ, பூம்புகார் உட்துறைமுக கடலோர பகுதிகளில் பொலித்தீன் பிளாஸ்ரிக் குப்பைகள் நிறைந்து காணப்படுகின்றன. இதற்குக் காரணம், சர்வதேச கப்பல்களின் ஆதிக்கமும் வருகையும் தான்.

நங்கூரமிடப்பட்டிருக்கும் கப்பல்களின் கழிவுப் பொருட்கள், கொட்டப்படுவதால் கடற்கரையோரங்களில் கழிவுகள் தேங்கிவிடுகின்றன. இதனால், மாதத்தில் ஒரு தடவையேனும் சிரமதானம் மூலம் அவற்றை அகற்றுகின்ற நிலைமையும் காணப்படுகின்றது. இவ்வாறு சேகரிக்கப்படுகின்ற குப்பை கூழங்கள், ஏறத்தாள நான்கு தொன்களுக்கு கூடுதலாக இருக்கும் எனவும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவிக்கின்றனர். கழிவுகள் கொட்டப்படுகின்ற செயற்பாடுகள் குறித்து, பொது அமைப்புகள், மீன்பிடி சங்கங்கள் தமது எதிர்ப்புகளை தொடர்ந்தும் வெளிப்படுத்தி வருகின்றார்கள்.

மேலும், இவ்வாறு வருகை தரும் சர்வதேச கப்பல்கள், ஒரு நேரகாலம் இல்லாமல், பயணிப்பதற்கான எல்லை ஒன்று இல்லாமல், மீனவர்கள் தொழில் செய்யும் பிரதேசங்கள் ஊடாகப் பயணிப்பதால் வலைகள் வெட்டுப்பட்டு, நாசம் அடைவதாக குற்றம் சுமத்துகின்றனர்.

பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில், மீன்பிடித்து விற்பனை செய்து அதன் மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு பல இலட்சம் ரூபாய்களைச் செலவிட்டு, வலைகளை வாங்கி பயன்படுத்தினால், இவ்வாறு செல்லுகின்ற கப்பல்களால் வலைகள் நாசமடைவதாகவும் மீனவர்கள் அங்கலாய்க்கின்றனர்.

அத்துடன், விரும்பிய இடத்தில் நங்கூரமிடுவதாலும் கழிவுப்பொருட்கள், பாதுகாப்பு வேலிக்கம்பிகள் போன்றவை கடலில் வீசப்படுவதால் பல இலட்சம் பெறுமதியான வலைகள் நாசம் அடைவதாகவும், இவ்வாறு சல்லி கடற்பரப்பில் தமது வலைகளில் சிக்குண்ட பாதுகாப்பு வேலி கம்பிகளைப் பல மணிநேர போராட்டத்துக்குப் பின்னர் தாம் கரைக்கு இழுத்து வந்ததாகவும் சில சந்தர்ப்பங்களில் தாம் மீன்பிடிக்கப் பயன்படுத்தும் வலையை கடலிலே விட்டுவிட்டு வருவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை துறைமுகத்தை அண்மித்த கடற்பரப்பில் நங்கூரமிடுவதற்குப் பல கடற்பரப்புகள் இருந்தபோதிலும், இவ்வாறு சிறு மீன்பிடி தொழிலாளர்கள் மீன்பிடிக்கும் கடற்பரப்பில் நங்கூரமிட்டு, தமது வாழ்வாதாரத்தை அழிப்பது மனவேதனை தருவதாக சல்லி, சாம்பல்தீவு மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

சர்வதேச கப்பல்கள் நங்கூரமிடுவதற்கு திருகோணமலை துறைமுகத்தினை அண்டிய கடற்பகுதிகள் காணப்படுகின்ற போதிலும் அப்பகுதியில் அவர்கள் நங்கூரமிடாமல் விரும்பிய பகுதிகளில் மீனவர்களின் வாழ்வாதாரத்தினை பாதிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

கடந்த காலங்களில், திருகோணமலை கடற்பரப்பில் இலங்கை போக்குவரத்துச் சபை பயன்படுத்தி பழைய வாகனங்களை, மீன் இனப்பெருக்கத்துக்கு எனக் கடலில் போடப்பட்டது. அவ்வாறு போடப்பட்ட வாகனங்களாலும் நீரோட்ட காலப்பகுதியில் பல அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகவும், இதனை ஒரு சவாலாக தமது வாழ்வாதாரத்தினை முன்னெடுத்து வருகின்ற நிலையில், சர்வதேச கப்பல்கள் நங்கூரமிடுவதால் தாம் பெரும் நட்டத்தினை எதிர்நோக்குவதாக சல்லி, சாம்பல்தீவு மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகளில் கடற்பரப்பில் நீரோட்டங்களின் வேகம் குறைவதோடு, குப்பை கூழங்களும் பெருமளவில் அதிகரித்து கடலும் பெருமளவில் மாசடைந்து வருவதாகவும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பில், மீனவ சங்கங்கள் ஊடாக உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்திய போதிலும், எமது ஜீவனோபாயத்தில் எவரும் அக்கறை கொள்ளவில்லை. நாட்டில் விவசாயத்தைப் பின்தள்ளி அரிசி இறக்குமதி செய்யப்படுவதுபோல், மீன்பிடியையும் இல்லாதொழித்து, மீன் இறக்குமதி செய்யும் சூழ்நிலை உருவாக வழிவகுக்க வேண்டாம் என சல்லி, சம்பத்தீவு மீனவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.





## மட்டக்களப்பில்

# வெள்ளத்துக்கு ஈடுகொடுக்கும் திட்டம் என்ன?



வ. சக்திவேல்
shagthivel@gmail.com





மட்டக்களப்பு மாவட்டத்தில் வருட இறுதிப்பகுதி வந்தால் வெள்ளம் தலைக்கேறிவிடும். அதனால் மக்கள் படும்பாடுகள் சொல்லில் அடங்காதவையாகும். இவ்வாறு வருடம்தோறும் வெள்ளம் வருவதுவும் அதற்கு அரசும், அரச சார்பற்ற அமைப்புகளும் உதவி வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

இந்நிலையில் கடந்த வருடங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட மழை வெள்ளத்தின் பாதிப்புகளால் மில்லியன் கணக்கான நிதிச் செலவுகளும் இடம்பெயர்வுகளும் இன்னல்களும் ஏற்பட்டிருந்தன.

இதற்கிணங்க மட்டக்களப்பு மாவட்டத்திலும் பருவகால மழை வீழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டிருக்கும் நிலையில், பொதுமக்கள் நலன் கருதி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முன்னாயத்தம் தொடர்பாக ஆராயும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுவின் விசேட கலந்துரையாடல் அண்மையில் மட்டக்களப்பில் இடம்பெற்றிருந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்காலத்தில் மழையுடன் கூடிய வானிலை நிலவினால் அச்சந்தர்ப்பத்தில் பிரதேச செயலக பிரிவுகள் ரீதியாக, அதிலும் குறிப்பாக மாவட்டத்தில் வெள்ளத்தால் அதிகமாக பாதிப்பிற்குள்ளாகும் பிரதேச செயலக பிரிவுகளில் முன்னெடுக்கப்பட வேண்டிய அனர்த்த முன்னாயத்த நடவடிக்கைகள் தொடர்பாக இதன்போது விரிவாக ஆராயப்பட்டது. அத்துடன், கடந்த காலங்களில் அனர்த்த வேளைகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக எவ்வாறான செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன என்பது தொடர்பான விவரங்கள், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினால் காண்பிக்கப்பட்டிருந்தது.

கமநல சேவை திணைக்களத்தின் கீழ் உள்ள குளங்கள் உடைப்பெடுக்கும் சந்தர்ப்பங்களில் மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பாவும் மாவட்டத்தில் உள்ள பாரிய குளங்கள், நீர்த்தேக்கங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

அத்தோடு அனர்த்த வேளைகளில் முப்படையினரால் மேற்கொள்ளப்பட வேண்டிய பொதுமக்களின் உயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாகவும், காடுகள், சதுப்பு நிலங்கள் மற்றும் வெள்ளம் வடிந்தோடும் பகுதிகள் தனிநபர்களால் நிரப்பப்படுவதற்கு எதிராக மேற்கொள்ளப்பட வேண்டிய சட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டிருந்தன.

அதேவேளை, அனர்த்த காலங்களில் பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள், அரிசி போன்றவற்றின் பொருட் கையிருப்பு போதுமானதாக உள்ளதா என்பது தொடர்பாக வாராந்த பொருளிருப்பு கணக்கெடுப்பினை சதோச மற்றும் தனியார் நிறுவனங்களில் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் தொடர்பில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரால் இதன்போது உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.

"ஒரு சிறு துளி நீரையும் கடலைச் சென்றடைய விடமாட்டேன்" என அப்போதே முதலாம் பராக்கிரமபாகு நினைவுபடுத்த வேண்டியுள்ளது. அது ஒரு புறமிருக்க வருடாந்த மட்டக்களப்பு மாவட்டத்தில் வருடந்தோறும் தாழ் நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்குவதுவும் சிறிய மற்றும் பெரிய குளங்கள் நிரம்பி வழிந்து இயற்கையாகவே கிடைக்கும் மழைநீர் வீணாக வங்கக் கடலைச் சென்றடைவதுவுமாகத்தான் இதுவரையில் இருந்து வருகின்றது வழக்கமாகவுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

நாட்டில் காலத்திற்குக் காலம் மாறி மாறி வருகின்ற அரசாங்கங்கள் அபிவிருத்தியில் புரட்சியை ஏற்படுத்துவோம் எனக் கூறி வந்தாலும் இன்னும் மட்டக்களப்பு மாவட்டத்தில பல கிராமியக் குளங்கள் தூர்ந்துபோயும், அவை தூர்வாரி செப்பனிடப்படாமலும்தான் காணப்படுகின்றன. இவ்வாறு சிறிய குளங்களைப் புணரமைப்புச் செய்து, மேலும் கிராமியக் குளங்களைப் புதிதாக உருவாக்கி, பெரிய விவசாயக் குளங்களும் விஸ்தரிக்கப்படும் பட்சத்தில் இயற்கையாகவே கிடைக்கும் மழை நீர் சேமிக்கப்படும் என்பதோடு, ஆண்டில் பெரும் பகுதியை இம்மாவட்டம் வரட்சிக்கு ஈடுகொடுக்கும் நிலையிலிருந்து ஓரளவேனும் பாதுகாக்கப்படும்.

வருடாந்தம் ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களில் பெய்யும் மழை நீர், சித்திரை மாத்திலேயே வற்றி விடுகிறது. சித்திரை தொடக்கம் புரட்டாதி மாதம் வரையில் மாவட்டத்தின் பெரும்பாலான மக்கள் பெரும் வரட்சிக்குட்படும் நிலைமையும் வழக்கமாகவுள்ளது. மாவட்டத்தில் 2 மாதங்களில் எவ்வளவுதான் மழைவீழ்ச்சி பதிவாயிருந்தாலும், அதனைச் சேமித்து வைக்கவும், வரட்சிக்கு ஈடுகொடுக்கும், நீடித்து நிலைத்திருக்கும் திட்டங்கள் இதுவரையில் துறைசார்ந்தவர்களால் வகுக்கப்பட வில்லையா எனவும் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

"எம்மிடம் இருக்கின்ற நீர்வளம், நில வளங்களை சரியாகப் பயன்படுத்தினால், நிச்சயமாக மாவட்டம் பூராகவும் 3 போகமும் வேளாண்மை செய்கைபண்ண முடியும். படுவாங்கரையில் நீர் வளமும் நிலவளமும் இருக்கின்றன. மாவட்டத்தில் 410 குளங்கள் இருக்கின்றன. அதிலே அரைவாசிக்கு மேற்பட்ட குளங்கள் எதுவித புணரமைப்புமின்றிக் காணப்படுவதுதான் விவசாயிகளுக்குப் பெரும் சவாலாக இருக்கின்றன. சரியான நீர்ப்பாசன முறைமை இல்லை. நீர்ப்பாசன முறைமையில் இன்னும் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். அந்தப் பிரச்சினைகளுக்குரிய தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு நாங்கள் வேலை செய்கின்றோம்" என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

வருடாந்தம் வெள்ள அனர்த்தத்தால் பாதிப்பு விடயங்களுக்கும், அதன்மீள் கட்டுமானங்களுக்கும் செலவு செய்யும் நிதியை வெள்ளம் வருமுன் மேற்கொள்ளவேண்டிய திட்டங்களுக்கு செலவு செய்யப்படும் பட்சத்தில் அரச நிதியும் விரையமாகாமல் மக்களையும் பாதுகாத்து, அபிவிருத்திகளையும் முன்கொண்டு செல்லலாம் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உறுகாமம், கித்துள் ஊடாக வரும் முந்தனையாறும், மாதுறு ஓயா ஊடாக வரும் ஆறும் கிரானில் சந்திக்கின்றன. இந்த இரண்டு ஆற்றினூடாக வரும் நீரைக் கொண்டு செல்வதற்கு ஓட்டமாவடி பாலம் போதாது. இதற்கு கிரான் கோஸ்வே பகுதியில் பெரிய கற்பாறை அமைந்துள்ளது. இதனால் அந்த ஆறு ஒடுங்கிப்போயுள்ளது. இதனை சீர் செய்யவேண்டும் என நான் பலதடவை மட்டக்களப்பு மாட்டத்திலிருந்த அதிகாரிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் தெரிவித்தேன். ஆனால் அதனை யாரும் கவனிக்கவில்லை. சட்டவிரோத மண் அகழ்தல், தோணாக்களை மூடுதல், தாழ்நிலங்களை நிரப்பி வீடுகட்டுதல், திட்டமிடப்படாத கொங்றீட் வீதிகள் நிர்மாணம், நீர்வழிந்தோடும் இடங்களை மறித்துக் கட்டுதல் போன்றவும் வெள்ளம் தேங்குவதற்குரிய காரணங்களாகின்றன என நீர்ப்பாசன திணைக்களத்தின் ஓய்வு பெற்ற பணிப்பாளர் நாயகமும், சிரேஷ்ட பொறியியலாளர் ஒருவர் தெரிவித்தார்.



# சுயமாகச் சிந்தித்து நீங்களாகவே தீர்மானங்களை எடுங்கள்

எவ்வளவுக்கு எவ்வளவு சுயமாகச் சிந்தித்து, முடிவுகளை எடுக்கின்றோமோ, அதுதான் சிறந்த முடிவாக இருக்கும். இனிமேலும் சிந்திக்காது, சுகாதார வழிகாட்டல்களை முறையாகப் பின்பற்றாது இருந்தோமென்றால், 'ஒமிக்ரான்' தொற்றிக்கொள்வதை எவராலும் தடுக்கமுடியாது.

தென் ஆபிரிக்காவில் இனங்காணப்பட்ட ஒமிக்ரான் பிறழ்வை அடுத்து, 24க்கும் மேற்பட்ட நாடுகள் தங்களுடைய எல்லைகளை இழுத்து மூடிவிட்டன. அது முன்னெச்சரிக்கையாக எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும். இதற்கிடையில் அறிவிப்பொன்றை விடுத்திருந்த இலங்கை சுகாதாரப் பிரிவு, நாட்டுக்குள் ஒமிக்ரான் நுழைவதற்கான ஓட்டைகள் விமான நிலையத்தில் குறைக்கப்பட்டுள்ளன என்றது.

அதனோடு, நாட்டுக்குள் ஒமிக்ரான் நுழைந்திருக்கலாமென அச்சம் தெரிவித்த மறுநாளே, ஒமிக்ரான் தொற்றுக்கு உள்ளானவர் இனங்காணப்பட்டார். அவருடன் நெருங்கிப் பழகியவர்களை இனங்கண்டு, முறையாகத் தனிமைப்படுத்தவேண்டும். இல்லையேல் மரவரிப்படம் போல, நீண்டுகொண்டே சென்றுவிடும்.

விமான நிலையத்தில் முறையான பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டுகளுக்கு உரிய பதில்கள் வழங்கப்படுவதே இல்லை. குற்றச்சாட்டுகளை செவிமடுத்து, அதற்கான மாற்று ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படுவதே இல்லை. அவ்வாறு செய்திருந்தால், விமான நிலையத்தில் வைத்தே, ஒமிக்ரான் தொற்றாளரை இனங்கண்டு கொண்டிருந்திருக்கலாம்.

இப்போதும் காலந்தாழ்த்தாமல் சுகாதார வழிகாட்டல்களை அச்சொட்டாகப் பின்பற்றுவதன் ஊடாகவே, ஒமிக்ரான் தொற்றிக்கொள்ளாமல் தற்பாதுகாத்துக்கொள்ள முடியும். ஒவ்வொருவரும் சுயமாகச் சிந்திக்கவேண்டும். கொவிட்-19 பெருந்தொற்றால், நாடு முழுமையாக முடக்கப்பட்டமை, பயணக்கட்டுப்பாடுகள், மாகாணங்களுக்கு இடையிலான பயணக்கட்டுப்பாடுகள் போன்ற இன்னோரன்ன மாற்று ஏற்பாடுகளை எவரும் எளிதில் மறந்திருக்கமாட்டார்கள்.

'பழைய குருடி கதவைத் திறவடி' என்பதைப் போல, நாடு மீண்டும் பழைய நிலைக்குள் செல்லாது என்பதற்கான எவ்விதமான உத்தரவாதமும் இல்லை. ஆனாலும், நாட்டில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான நிலைமைகளைக் கவனத்தில் கொண்டும், சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டிருக்கும் வழிகாட்டல்களை அச்சொட்டாகப் பின்பற்றுவதன் ஊடாகவே பாதுகாப்பைத் தேடிக்கொள்ளமுடியும்.

கொரோனாவின் முடக்கத்தால் செங்கூத்தாகச் சரிந்திருந்த ஒவ்வொரு துறைகளும் மெதுவாகத் தலையைத் தூக்கி, துளிர்விட்டுக் கொண்டிருக்கின்றன. அத்துளிரை நறுக்கென கிள்ளியெறிந்து வீசுமளவுக்கு சென்றுவிடக்கூடாது என்றால், ஒவ்வொருவரும் சுயமாகவே சிந்தித்து, சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றவேண்டும்.

ஆனாலும், சில இடங்களில் அவற்றைக் காணவே கிடைப்பதில்லை, பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவோர், பயணத்தை ஆரம்பித்தவுடன் 'செனிடைஸரை' பூசிக்கொண்டனர். மிகுதி பணத்தை கூட, 'செனிடைஸரை' பூசியே பெற்றுக்கொண்டனர். சில்லறைகளை கைகளில் தொடுவதற்கு கூட அஞ்சினர்.

தற்போது, ஒருசிலரைத் தவிர பலரும், கொரோனா தங்களுக்கு தொற்றவே தொற்றாது என்பதைப் போல, நடந்துகொள்கின்றனர். சுகாதார வழிகாட்டல்களை மீண்டும் வழக்கப்படுத்திக்கொள்ளவேண்டுமென நாமும் வலியுறுத்துகின்றோம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

குடும்ப வன்முறைகள், பலவிதமான முறைகளில் நடந்தபடி இருப்பது பலருக்குத் தெரியாது. மௌனமாகவே இருந்தபடி, குடும்பத்தில் ஒருவரைப் பலரும் இணைந்து தூற்றுவதை, இரகசியமாகச் செய்வதுண்டு.

மனைவி பயந்த சுபாவம் கொண்டவளாக இருந்தால், அவள் வாழ வந்த குடும்பத்தில், கணவனது உறவுக்காரர்கள் மிரட்டிப் பயமுறுத்தியும் கிண்டலடித்தும் அவளது மனத்தைக் காயப்படுத்திவிடுவார்கள். எதிர்த்துப் பேசினால் பொல்லாதவள் என்பார்கள்.

எடுத்ததெற்கெல்லாம் குறை சொல்வதுடன், அவளை ஒதுக்கிவைத்து, அந்தப் பரிதாபமான இல்லத்தரசியை கண்டு கொள்ளாமல் விட்டுவிடுவார்கள். சொல்லும் குறைகளையும் தங்களுக்குள் இரகசியம் பேசி, இல்லாத பொய்களைச் சொல்வார்கள். ஆனால், வெளியுலகுக்கு நடிப்பார்கள்.

சில வீடுகளில், மனைவியே கணவனை கௌரவமாக நடத்தாமல் இருப்பதுண்டு. எவர் மனதையும் சூட்சுமமான வழிகளில் துன்புறுத்துதல் அடாத செயலாகும். மௌன யுத்தம் குடும்பங்களில் நடக்கலாகாது.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# இனக்குரோத வெறுப்பு அரசியல்

லக்ஸ்மன்

அரசியலில் குறிப்பாக இலங்கை அரசியலில்த்தான் வெறுப்புப் பேச்சுகள் அதிகம் கொட்டப்பட்டு வருகின்றன. விரோதமும் இதனுடன் இணைந்து வந்துவிடுகிறது. இதற்கு தற்போது நடைபெற்றுவரும் பாராளுமன்ற உரைகள் நல்ல சாட்சியாகும். இதனை ஒரு தரப்பு மாத்திரம் செய்து கொண்டிருக்கிறது என்று குற்றம் சாட்டிவிடமுடியாதளவுக்கு எல்லோருமே நாட்டின் சட்டவாக்க மன்றத்திலேயே வெறுப்புகளையும் வெப்புசாரங்களையும், விரோதங்களையும் கொட்டுகின்றனர்.

நாட்டை நேசிக்கிறோம்; நாட்டின் சட்டங்களுக்குக் கட்டுப்படுகிறோம் என்று சொல்லிக் கொண்டு நாட்டின் சட்டங்களுக்கும் எதிர்கால நோக்கங்களுக்கும் ஒழுங்குகளுக்கும் விரோதமாகவே காலங்காலமாக இயங்கிக் கொண்டிருப்பவர்கள், நாட்டின் மீது பற்றுக் கொண்டவர்களாக பொது வெளியில் மார்தட்டிக் கொள்கின்ற நிலைமையொன்று இலங்கையில் காணப்படுகிறது. ஆனாலும் அவர்கள், தேசப்பற்றாளர்கள் என்றே தம்மைச் சொல்லிக் கொள்கிறார்கள்.

நாட்டின் சட்டத்துக்குள் கட்டுப்படாத தனிச்சட்டம், அதில் மாற்றங்களை ஏற்படுத்துவதாக இருந்தால் அதற்கு பெரும் எதிர்ப்பையும் அழுத்தங்களையும் பிரயோகித்துக் கொண்டு தம் தரப்பு மக்களை நெருக்கடிக்குள்ளேயே வைத்து நகர்வதற்குப் பெயர் அராஜகம். இதனையே இராஜாங்கம் என்கிறார்கள் போல.

நமது நாட்டுக்கு புதிய ஜனாதிபதியாக யார் தெரிவு செய்யப்பட்டாலும் அவர்களுடன் சேர்ந்து விடுவது, அரசாங்கம் மாறும் போதெல்லாம் ஆளும் தரப்புக்கே சார்பாக இருந்து கொள்வது, நினைத்தபோதெல்லாம் சாய்ந்து நலன்களை அனுபவித்துக் கொள்வது எனும் செயற்பாட்டுக்குப் பெயர் அரசியல். இதுவும் நம்நாட்டில்தான் இருக்கிறது.

அரசியல் என்பது கொள்கை இல்லாதது என்பதற்கு இங்கு தான் உதாரணங்கள் அதிகமாக இருக்கின்றன. கட்சிக் கொள்கைக்கும் கட்டுப்பாடுகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் கட்டுப்படாதவர்களும் நம் நாட்டின் அரசியல்வாதிகளேயாவர்.

இவ்வாறு இருக்கும் நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தின் புதைக்கப்பட்ட உண்மைகளை வெளியே கொண்டுவந்தார் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சரும் தற்போதைய மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான நசீர் அஹமட் என்று வாழ்த்துக்கள் வந்தவண்ணமிருக்கின்றன. அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹரீசுக்கும் அது போன்ற வாழ்த்துகள் குவிகின்றன.

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் காணிகளை காணவில்லை என்பதே, இப்போது வாதப் பிரதிவாதங்களை உருவாக்கியிருக்கிறது.

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பில் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசபுத்திரன் சாணக்கியன், முஸ்லிம் மக்களுக்காகவும் அவர்களது உரிமைகளுக்காகவும் குரல் கொடுக்கிறார். ஆனால் எதிர்முனையிலிருந்து கிடைப்பதென்னவோ வேறாக இருக்கிறது என்ற கருத்துகள் வெளிவரத் தொடங்கியிருக்கின்றன.

தமிழர்களும் முஸ்லிம்களும் 'பிட்டும் தேங்காய்ப்பூவையும் போன்றவர்கள்' என்று பிணைப்பைப் பற்றிப் பேசுபவர்கள், பரஸ்பரம் விட்டுக் கொடுப்புக்குக் கூட தயாரில்லாத நிலையில், எதனை அடைந்து கொள்ள முடியும் என்பதே கேள்வி.

கடந்த பாராளுமன்றத் தேர்தல் நிறைவடைந்தவுடன், முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்கட்சியாகத்தான் இருக்கிறது என்று எல்லோரும் எண்ணிக் கொண்டிருந்த வேளை, 20ஆவது திருத்தத்துக்கு வாக்களித்து பொத்துவில் முஸ்லிம் கல்வி வலயம், மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் பிரதேச செயலகங்களின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பதவிகள், கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தின் தரமுயர்த்தலுக்கு ஆப்பு என நீண்ட பட்டியலுடன், அரசாங்கத்துடன் சேர்ந்தியங்கும் உறுப்பினர்களாக, தமிழ் மக்களிடமிருந்தும் தமிழ் அரசியல்வாதிகளிடமிருந்தும் பிரிந்தே இருப்போம் என்று வெளிப்படையாகவே, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் காண்பித்தார்கள்.

எப்போதும் பிரிந்தே இருக்கப் போகிறோம். என்று, மாற்று என்ற சொல்லுடன் விரோத, பிரிவினை மனோபாவத்தை இணைத்து வைத்திருக்கும் போது எதனையும் வெளிப்படையாகப் பேசி நகர்த்த முடியாது என்பதுதான் உண்மை.

கிழக்கைப் பொறுத்தவரையில், சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவு நியமிக்கப்பட்டது முதல் அவர் பதவியிலிருந்த காலத்தில் மாகாணத்திலுள்ள அனைத்து இனங்களையும் சமனாகவே கையாண்டார். ஆனால், அதன் பின்னர் மாகாணத்தின் முதலமைச்சராக வந்தவர்கள், மாற்றான் தாய் மனோபாவத்துடன் அதிகாரத்தைக் கையாண்டார்கள் என்ற குற்றச்சாட்டு இருப்பதற்கு இந்தப் பிரிவினை மனோபாவமே காரணமாகும்.

இலங்கையில் இனப்பிரச்சினை உருவான காலத்தில், இடதுசாரிச் சிந்தனைகளுடனும், ஜனநாயகச் சிந்தனைகளுடனும் செயற்பட்ட பல முஸ்லிம் சகோதரர்கள் விடுதலைப் போராட்ட இயக்கங்களில் இணைந்து ஆயுததாரிகளாகக் கூட செயற்பட்டிருக்கிறார்கள். இப்போதும் பிரபல அரசியல்வாதியாக இருக்கின்ற முன்னாள் அமைச்சர் பஷீர் சேகுதாவூத் கூட, ஈரோஸ் இயக்கத்தின் உறுப்பினரே. இவர் போல் பலரைப் பட்டியலிட முடியும்.

ஆனால், அதன் பின்னரான காலங்களில், அவர்கள் தமிழ் போராட்ட இயக்கங்களிடமிருந்து வேறு சக்திகளின் பிரித்தாளும் சூழ்ச்சிகளினாலும் இன்னும் வேறு பல காரணங்களினாலும் பிரிந்து போனார்கள். அதன் பின்னர் தனித்தே செயற்படுகிறார்கள். தங்களுக்காக தனியான வலயக்கல்வி அலுவலகங்கள், பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள் என்று அமைத்துக் கொள்ள முனைந்து இப்போது பெரும் கட்டுமானமாகவே மாறிவிட்ட நிலையில், அவர்களுடைய தற்போதைய முன்வைப்புகளும் எதிர்பார்ப்புகளும் வேறு பல கருத்துகளைக் கொண்டதாக இருக்கிறது.

இலங்கையில் நடைபெற்ற ஆயுத யுத்தமானது தமிழ் மக்களை பொருளாதார, சமூக, பாதுகாப்பு ரீதியில் மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளிவிட்டது. அதனைச் சாக்காக வைத்துக் கொண்டு, தமிழ் மக்களுக்கான உரிமைகளையும் வசதிகளையும் நலன்களையும் தம்முடையதாகப் பயன்படுத்திக் கொண்டு, எல்லாவற்றையும் அனுபவிப்பவர்களாக மாற்றம் பெற்றனர்.

1992 இல் காத்தான்குடி நகர், ஏறாவூர் நகர், கோறளைப்பற்று மேற்கு, 2001இல் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகப் பிரிவு எனத் தமக்கான தனியான பிரதேச செயலகங்களையும் பிரதேச சபைகளையும் உருவாக்கிக் கொண்டார்கள். ஆனால் அவற்றின் பரப்பு எல்லைகளை இப்போதும் தமிழர்களது பிரதேசங்களிலிருந்து அபகரித்துக் கொள்ள முனைகிறார்கள் என்பது தமிழர் தரப்பு வாதமாக இருக்கிறது.

முஸ்லிம் தரப்பினுடைய வாதம் எவ்வாறிருக்கிறதென்றால், 24.9 சதவீதம் வாழும் முஸ்லிம்களுக்கு மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களுக்கு 1.30 சதவீத காணிகள் தான் வழங்கப்பட்டுள்ளன. எனவே எங்களுக்கு விகிதாசாரத்திற்கு ஏற்ப காணியைப் பிரித்துக் கொடுங்கள் என்பதாகும்.

இந்த வாதமானது, வரலாற்று ரீதியாக பார்க்கப்பட வேண்டியதாகும். 1960களில் முஸ்லிம்களின் விகிதாசாரம், 1992களில் குடியிருப்பு விகிதாசாரம், 2000ஆம் ஆண்டு, 2020ஆம் ஆண்டு என்று ஆராயப்படவேண்டும். அல்லாமல் இப்போது இருக்கின்ற சனத்தொகை அதிகரிப்புக்கு எமக்கு நிலம் கேட்பது நியாப்பாடானதா என்பது இந்த இடத்தில் தமிழர் தரப்பு நியாயம்.

என்னுடைய இனத்தின் சனத்தொகை பெருக்கத்துக்கு ஏற்ப நிலம் வேண்டும் என்றால் அது பிழையானதோர் அணுகுமுறையாகும். ஆனால், மட்டக்களப்பு மாவட்டத்தினை எடுத்துக் கொண்டால், விவசாய நிலங்களை அதிகமாகக் கொண்டிருப்பவர்கள் முஸ்லிம்களாக இருக்கிறார்கள். இந்த நில விகிதாசாரத்தினை விவசாய நிலத்துக்கும் சேர்த்துக் கொள்வதில் முஸ்லிம் அரசியல்வாதிகள் தவறிவிடுகின்றனரா அல்லது மறைக்கின்றனரா என்பதே இந்த இடத்தில் கேள்வி.

தமிழ் மக்களின் நிலங்கள், விவசாய நிலங்களை விவசாயத்துக்கான உரம், விதை, கிருமிநாசினி, உழவுக்கான பணம், அறுவடைப் பணம் எனக் கொடுத்தும், தமிழர்களின் காணிகளை அபகரித்துள்ள சந்தர்ப்பங்கள் பல இருக்கின்றன. அதேபோன்று தமிழர்களுடைய எல்லைக் கிராமங்களின் காணிகளை பல்வேறு நெருக்குதல்களை ஏற்படுத்தி, மிக மிகக் குறைந்த விலைகளின் அபகரித்த சந்தர்ப்பங்கள் உள்ளன. இப்போதும் நடைபெறுகின்றன என்பதே நிரூபிக்கத்தக்க உண்மைத் தகவல்.

தமிழ் மக்கள், பெரும்பான்மை சிங்கள அதிகாரத்துக் எதிராகப் போராடிக் கொண்டிருந்த அதேவேளை, தமிழ் பேசும் முஸ்லிம்களின் ஆயுத ரீதியாகவும் அதிகார ரீதியாகவும் என பாதுகாப்பு சார்ந்து பல்வேறு பிரச்சினைகளை எதிர் கொண்டே வந்தனர். இப்போதும் பலவற்றை எதிர்கொள்கின்றனர். அதிகார ரீதியான பாகுபாடுகள் காட்டப்படுவதனை, வெளிப்படையாகப் பேசுவதற்கு முடியாத நிலைமைகள் காணப்படுகின்றன. அந்த வகையில் தான் கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பில் இனத்துவ நிலைமைகள் காணப்படுகின்றன.

மாவட்டத்தின் பல விடயங்கள் வெளியிடப்பட்டாலும் உள்ளே நடைபெற்றிருக்கின்ற பல விடயங்களை மறைத்து, தமக்கான நியாயத்தினைப் பெறவே முஸ்லிம் அரசியல் தலைவர்கள் முயற்சிக்கிறார்கள். இந்த நிலையில்தான் அதற்கான பதிலை மட்டக்களப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கிழக்கின் முதலாவது முதலமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் வழங்கியிருந்தார்.

இவையெல்லாம் ஒருவகையில் வாதமாக இருந்தாலும் தமிழர்களின் பூர்வீகம் அழிந்துவிடக்கூடாது என்ற போராட்டத்தில், சிங்களவர்களை விடவும் மிக மோசமாக தமிழர்களின் பாரம்பரியங்களையும் வரலாறுகளையும் அழிக்க முயல்வது எந்தவகையில் நியாயம் என்பதே இந்த இடத்தில் கேள்வி.

எமக்கான அரசியலை நாம் செய்யவேண்டும். அவ்வேளைகளில் ஏனையவர்களின் அரசியலுக்கு அது இடைஞ்சலாக இருக்கக்கூடாது என்பதனை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். இல்லையேல் அது பெரும் தவறேயாகும்.

(மட்டக்களப்பின் ஏறாவூர் நகர சபைப் பிரதேசத்தில் 'நெக்டப்' திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு திறக்கப்படாமலேயே அழிந்து போன ஏறாவூர் பொதுச்சந்தைக்கு இக்கட்டுரை சமர்ப்பணம்)

## கடிதங்கள்

### முதலைகளால் அச்சம்

அம்பாறை மாவட்டத்தில் பெரும்போக வேளாண்மை செய்கை ஆரம்பமாகியுள்ள நிலையில், அதிகளவிலான முதலைகள் வெளியேறி, மக்கள் குடியிருப்புகளுக்குள் செல்கின்றன.

மாவடிப்பள்ளி பாலத்தை அண்மித்த ஆற்றை விட்டு, இரவிலும் பகலிலும் முதலைகள் வெளியேறுவதால் வீதியால் செல்லும் பாதசாரிகள் அச்சத்துடனேயே செல்கின்றனர். குறிப்பாக, இரவு நேரங்களில், சுமார் 9,5, 4 அடி நீளமுடைய முதலைகள் வெளியேறுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், கிட்டங்கி, மாவடிப்பள்ளி, சின்ன முகத்துவாரம் உள்ளிட்ட களப்புகளிலும் முதலைகளின் அச்சறுத்தல் தொடர்ந்து வருகின்றன. மேற்படி பகுதிகளில் உள்ள வாவிகள், குளங்களிலும் முதலைகளின் பெருக்கம் அதிகரித்து காணப்படுகிறது.

தற்போது பெரும்போக வேளாண்மை செய்கை ஆரம்பமாகி உள்ளதால், வயல்கள், கால்வாய்கள் ஆகியவற்றை அண்டிய பகுதிகளில் நீருக்காக குளங்களை நாடிச் செல்லும் ஆடு, மாடுகள் உள்ளிட்ட கால்நடைகளும் முதலைகளுக்கு இரையாகி வருகின்றன.

முதலைகளின் நடமாட்டம் சம்பந்தமாக, உரிய இடங்களில் அறிவுறுத்துதல்கள், எச்சரிக்கை பலகைகள் எதுவும் இதுவரை வைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

முதலை அபாயம் தெரியாமல், இப்பகுதியில் பயணிப்பதால் முதலையின் பிடிக்குள் அகப்படும் சாத்தியம் உள்ளது. இதை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுகின்றனர்.

என். ஹரன்

# தாய் நோயுற்றிருக்கும் போது தாய்ப்பால் ஊட்டலாமா?



பைஷல் இஸ்மாயில்



குழந்தை நித்திரையில் இருந்து எழும்பி, கண்ணைத் திறந்து விழிப்பாக இருந்து, வாயை அகலத்திறந்து கொட்டாவி விடும் போதும், குழந்தை தனது கையை மடித்து வாயில் வைத்து உறிஞ்சும்போதும், குழந்தை பசியுடன் உள்ளது என்பதை அறிந்து கொள்ளலாம். இன்றைய நவீன காலத்திலும் இலங்கையில் பெரும்பாலான தாய்மார்கள், தங்களது குழந்தைக்கு தாய்ப்பாலை முதன்மையான உணவாகக் கொடுக்கின்றனர். இது உண்மையிலேயே நாம் பெருமைப்படக் கூடிய ஒரு விடயமாகும் என்று கூறுகின்றார் மட்டக்களப்பு, போதனா வைத்தியசாலையின் குழந்தை நல வைத்திய நிபுணர் வைத்தியர் விஷ்ணு சிவபாதம் *MBBS, DCH, MD Paediatrics.* தாய்பாலூட்டுதல் தொடர்பான டொக்டர் விஷ்ணு சிவபாதத்துடனான உரையாடலை கேள்வி-பதில் வடிவில் தருகின்றோம்.

**கேள்வி: தாய்ப்பாலின் சிறப்பு பற்றி விளக்க முடியுமா?**

*பதில்:* பிறந்த சிசு தாய்ப்பாலைத் தாயிடமிருந்து பெறுவதற்கான அனைத்து உரிமைகளுக்கும் உரியதாகின்றது. இது உலக சுகாதார ஸ்தாபனத்தால் அங்கிரிக்கப்பட்ட ஒரு நடைமுறையாகும். தாய்மார்கள் தங்கள் குழந்தையின் முதல் ஆறு மாத காலத்துக்கு தாய்ப்பாலை மட்டுமே உணவாகக் கொடுத்தல் வேண்டும். அதன் பிறகு, தாய்ப்பாலுடன் சேர்த்து திண்ம உணவுகளைக் கொடுக்க ஆரம்பித்தல் வேண்டும். வேலைக்குச் செல்லும் தாய்மார்கள், நான்கு மாத முடிவில் தாய்ப்பாலுடன் திண்ம உணவுகளை கொடுக்கத் தொடங்கலாம்.

குழந்தை, முதல் ஆறு மாதத்துக்கு தேவையான அனைத்து ஊட்டச்சத்துகளையும் தாய்ப்பால் மூலம் பெற்றுக்கொள்கின்றது. குழந்தை பிறந்து 3 தொடக்கம் 5 நாள்களுக்குள் சுரக்கும் தாய்ப்பால் 'கொலஸ்ட்ரம்' என அழைக்கப்படும். அது, அளவில் சிறியதாகவும் மஞ்சள் நிறத்தில் இருந்தாலும் குழந்தைக்குத் தேவையான அளவு பாலை கொண்டிருக்கும். குறிப்பாக, பிறந்த சிசுவின் நிர்ப்பீடனத் தொகுதியை மேம்படுத்துவதற்கு இது உதவுகின்றது.

பல பெற்றோர்கள் தனது மகளுக்குத் தாய்ப்பால் சுரப்பது குறைவு; பிள்ளை எப்பொழுதும் அழுது கொண்டிருக்கிறது; என்ன பால்மா கொடுக்கலாம் என என்னிடம் கேட்பார்கள். இந்தக் கேள்விகள் அவர்களின் மனதில் தோன்றுவது ஒன்றும் புதிரான விடயமல்ல.

**கேள்வி: தாய்ப்பால் ஊட்டுவதால் ஏற்படும் நன்மைகள் என்ன?**

*பதில்:* தாய்ப்பால் ஊட்டுவதால் குழந்தைக்கும் தாய்க்கும் பல நன்மைகள் ஏற்படும். முக்கியமாக, குழந்தைக்கு உகந்த ஊட்டச்சத்தும் வளர்ச்சிக்குமான அனைத்து அம்சங்களும் தாய்ப்பாலில் அடங்கியுள்ளன. மூளை வளர்ச்சி சிறப்பாக இருக்கும் என்று ஆராய்ச்சிகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி தாய்ப்பாலூட்டல் மூலம் கிடைக்கின்றது.

அதாவது, தாயிடம் இருக்கும் அதிகமான நோய் எதிர்ப்பு சக்தி, தாய்ப்பால் மூலம் குழந்தைக்கு நேரடியாகக் கிடைக்கின்றது. இதனால் வாந்திபேதி, சுவாச சம்பந்தமான நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறைக்கப்படுகின்றது.

தாய்ப்பாலூட்டல் மூலம் குழந்தைகளுக்கு ஆஸ்துமா, ஒவ்வாமை, புற்றுநோய்கள், நீரழிவு, அதிக உடற்பருமன் போன்ற நோய்களையும் தடுக்கின்றது. தாய்ப்பாலை குழந்தை இலகுவாக அகத்துறிஞ்சுவதால், இதுவே முதல் ஆறு மாத காலத்திற்கு குழந்தைக்குரிய சிறப்பான போசாக்கு உணவாகும்.

தாய்ப்பால் ஊட்டுவதால் தாய்மார், மார்பகப் புற்றுநோய்,



வைத்தியர் விஷ்ணு சிவபாதம்
குழந்தை நல வைத்திய நிபுணர்

சூலகப் புற்றுநோய், நீரிழிவு, குழந்தை பிறப்பின் பின் ஏற்படும் மன உளைச்சல் போன்ற நோய்களில் இருந்து பாதுகாக்கப்படுகின்றனர். இவற்றைவிட முக்கியமாக, தாய்க்கும் சேய்க்கும் இடையில் ஓர் உணர்வு மிக்க பிணைப்பையும் ஏற்படுத்துகிறது.

**கேள்வி: தாய்ப்பால் கொடுக்கும் சரியான முறைகள் பற்றி தெளிவுபடுத்த முடியுமா?**

*பதில்:* தாய்ப்பால் ஊட்டுவது ஓர் இயற்கையான விடயம் என்றாலும், அதைச் சரியான முறையில் கொடுக்காதபோது, சிலவேளைகளில் அந்த முயற்சி தோல்வி அடையலாம். உண்மையில் தாய்மாருக்கு, தாய்ப்பாலின் சிறப்புப் பற்றியும் அதன் தேவையையும் கர்ப்ப காலத்தில் இருந்தே போதித்தல் வேண்டும். இதில் சிக்கல்கள் உள்ள தாய்மார்கள் வைத்தியசாலையில் உள்ள தாய்ப்பாலூட்டல் முகாமைத்துவ நிலையங்களிலோ அல்லது உங்களது பிரதேசங்களிலுள்ள மருத்துவமாதுவிடமோ கேட்டு அறிந்து கொள்ளலாம். ஏற்கெனவே, தாய்ப்பால் கொடுத்து அனுபவம் உள்ள தாய்மாருடன் அனுபவங்களை பகிர்ந்து கொள்வதால் மேலதிக தகவல்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

**கேள்வி: எந்த நேரங்களில் குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்க வேண்டும்?**

*பதில்:* தாய்ப்பால் நிறையுணவு என்பதால், குழந்தைக்குப் பசி எடுக்கும்போது கொடுக்க வேண்டும். குழந்தை பசியுடன் உள்ளது என்பதை பின்வரும் காரணிகளை வைத்து அறிந்து கொள்ளலாம். அதாவது, குழந்தை நித்திரையில் இருந்து எழும்பி கண்களைத் திறந்து விழிப்பாக இருந்து, வாயை அகலத்திறந்து கொட்டாவி விடும் போது; குழந்தை தனது கையை மடித்து வாயில் வைத்து உறிஞ்சும்போது, மேற்கூறிய அறிகுறிகளை அவதானிக்க தாய் தவறும்பட்சத்தில் குழந்தை பசியால் அழுகின்ற போது அறிந்து கொள்ளலாம்.

குறிப்பாக, தாய்மார்கள் கவனிக்க வேண்டியது, குழந்தை தொடர்ந்து இரண்டு அல்லது மூன்று மணித்தியாலங்கள் தூங்குமாயின் குழந்தையை எழுப்பி தாய்ப்பால் ஊட்ட வேண்டும். முக்கியமாக இரவு வேளைகளில் குழந்தையை எழுப்பி தாய்ப்பால் ஊட்ட வேண்டும்.

**கேள்வி: குழந்தை போதுமான அளவு தாய்ப்பால் குடித்துள்ளது என்பதை எவ்வாறு அறிந்துகொள்வது?**

*பதில்:* குழந்தை போதுமான அளவு தாய்ப்பால் குடித்த பின்னர்



அது, மார்பகத்திலிருந்து தானாகவே வாயை எடுக்கும். குறிப்பாக, குழந்தை தாய்ப்பால் குடிக்கும் நேரம் ஒவ்வொரு குழந்தைக்கும் வேறுபடும். நன்றாகத் தாய்ப்பால் குடித்த குழந்தை மகிழ்ச்சியாக தாயுடன் விளையாடும். அல்லது தூங்கிவிடும். தாய்ப்பால் கொடுக்கும் போது தாய்மாருக்கு மார்பகத்தின் பாரம் குறைவது போன்ற உணர்வு ஏற்படும். மேலும், மற்றைய மார்பகத்திலிருந்து சிறிதளவு பால் வெளியேறும். இவையெல்லாம் தாய்ப்பாலூட்டல் வெற்றிகரமாக நடைபெறுகிறது என்பதற்குரிய அறிகுறிகள் ஆகும்.

**கேள்வி: தாய்ப்பால் ஊட்டும் போது குழந்தைக்கு தண்ணீர் கொடுக்க வேண்டுமா?**

*பதில்:* குழந்தைக்குத் தேவையான எல்லா ஊட்டச் சத்துகளையும் கனியுப்புகளையும் தாய்ப்பால் கொண்டிருப்பதால் முதல் ஆறு மாத காலத்துக்கு தாய்ப்பாலுடன் வேறு எதையும் (தண்ணீர் உட்பட) கொடுக்கத் தேவையில்லை.

பால்மா கொடுப்பதால் தாய்க்கும் குழந்தைக்கும் இடையான உணர்வுபூர்வமான இணைப்பில் பாதிப்புகள் ஏற்படும். மேலும் குழந்தை அடிக்கடி வாந்திபேதி, சுவாச நோய்கள், காது நோய்கள் போன்ற தொற்று நோய்களுக்கு உட்படும். குறைந்தளவான மற்றும் அதிகளவு ஐதாக்கப்பட்ட பால்மா மூலம் குழந்தைக்கு மந்த போசனை ஏற்படலாம். அல்லது, அதிகளவு பால் கொடுப்பதால் உடற்பருமன் அதிகரித்து, அதன் மூலம் பிற்காலத்தில் பாரிய பிரச்சினைகள் ஏற்படலாம். அதாவது, ஒவ்வாமை, ஆஸ்துமா போன்ற நோய்கள் அதிகளவு ஏற்படும். குழந்தையின் புத்திக் கூர்மையில் பாதிப்புகள் ஏற்படலாம். முக்கியமாக, பெற்றோர்களுக்கு மேலதிக செலவீனங்களை ஏற்படுத்தும்.

பாலூட்டும் தாய்மார் நோய்வாய்ப்பட்டிருக்கும் போது தாய்ப்பால் ஊட்டக் கூடாது; மார்பகங்கள் வீக்கம் அடைந்து இருக்கும்போது தாய்ப்பால் ஊட்டக் கூடாது; அதிக வெப்பமான காலங்களில் தாய்ப்பாலுடன் சேர்த்து தண்ணீரும் கொடுக்க வேண்டும்; தாய்ப்பால் கொடுப்பதால் தாய்மார்களின் உடல் கட்டமைப்பு பாதிப்படையும்; சிறிய மார்பகங்கள் உடைய தாய்மார் மற்றும் முலைக்காம்பு தட்டையாக உள்ள தாய்மார் பாலூட்டுவது கடினம் போன்ற மூடநம்பிக்கைகள் பலரிடம் உள்ளன. இதிலிருந்து நாம் விழிப்படைய வேண்டும்.

தாய்மார் நோயுற்றிருக்கும் போதும் தாய்ப்பாலூட்டலாம். மார்பகங்கள் வீக்கம் அடைந்தால் கண்டிப்பாக பாலூட்ட வேண்டும். அவ்வாறு இல்லையாயின் மார்பகத்தில் சிதழ் கட்டிகள் ஏற்படலாம். அதிக வெப்பமான காலங்களில் தாய்ப்பாலுடன் சேர்த்து நீர் கொடுக்க வேண்டிய எந்தத் தேவையும் இல்லை. ஏனென்றால், தாய்ப்பாலில் போதியளவு நீருள்ளது. தாய்ப்பால் கொடுப்பதன் மூலம், கர்ப்ப காலத்தில் ஏற்பட்ட மேலதிக உடற்பருமனை குறைக்க உதவும். குழந்தை எந்த வகையான மார்பகத்திலும் தாய்ப்பால் குடிக்கக்கூடிய இசைவாக்கத்தை தாமாவே ஏற்படுத்திக்கொள்ளும்.

எனவே, இவ்வாறான மகிமைகளை கொண்ட தாய்ப்பாலைத் தங்களது குழந்தைக்கு கொடுப்பதை உறுதி செய்வதன் மூலம் வளமானதும், புத்தி கூர்மையும் உடைய சமுதாயத்தை உருவாக்கிக்கொள்ளலாம் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்துக்கும் இடமே இல்லை.



# மண் இல்லாது வாழ்வேது?



அ . அச்சுதன்

திருகோணமலை மாவட்டத்தின் வெருகல் பிரதேச பிரிவு இயற்கையான சுற்றுலாப் பகுதிகளை அதிகம் கொண்டமைந்த இடம் ஆகும். அதாவது, அப்பகுதியில் இயற்கையான பாறைகள், நீர்த்தடாகம் போன்ற அமைப்பை உடைய கடற்பகுதிகள், முகத்துவாரங்கள், அதிக மணற்பரப்பை கொண்ட கடற்கரைப் பகுதிகள், களப்புப் பகுதிகள் நிறைந்து காணப்படுகின்றன.

களப்புப் பகுதிகளில் கண்டல் தாவரங்கள், அக்களப்பின் நடுவே காணப்படும் தீவுகள், வணக்கஸ்தலங்கள், பாரம்பரிய வரலாற்று இடங்கள் என்பன வெருகல் பிரதேசத்துக்குச் சிறப்புத் தருகின்றன. வெருகலில் இயற்கையான பல்வேறு இடங்கள் காணப்பட்டபோதும் இன்றும் இப்பகுதியில் சுற்றுலாத்துறை விருத்தியடையாமல் இருக்கின்றன. இந்தநிலையில், வெருகல் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஆறுகளில், உரிய அரச திணைக்கள அதிகாரிகளின் அனுமதிகளுடனும் அனுமதிகள் இன்றியும் மணல் அகழ்வு இடம்பெற்று, வெளிமாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றது.

குறிப்பாக, வெருகல் நாதன் ஓடை ஆற்றில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு முன்னெடுக்கப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த மணல் அகழ்வை தடுத்து நிறுத்துமாறு கோரி, வெருகல் பிரதேச இளைஞர்கள் போராட்டம் ஒன்றை வெருகல் பிரதேச செயலகம் முன்பாக 22-11-2021 அன்று முன்னெடுத்திருந்தனர்.

குறித்த பகுதியில், கடந்த நான்கு மாதங்களுக்குள் மிகவும் அதிகமான மணல் அகழ்வுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து வகைதொகை அற்ற அளவில் மண் அகழப்பட்டு, மாவட்டத்திற்கு வெளியில் குறிப்பாக, தென்பகுதிக்கு எடுத்துச் செல்லப்படுவதாக மக்கள் முறையிடுகின்றனர்.

தற்போது மண் அகழும் இடமானது, மண் அகழ்வதற்கு எவ்வகையிலும் பொருத்தமற்ற இடம். இது ஏற்கெனவே அணை உடைப்பெடுத்தமையால் சேர்ந்த மண் என்பதுடன், நீரோட்டத்துக்குக் காப்பாக, மக்கள் குடியிருப்புப் பகுதியில் வெள்ளம் புகமுடியாதவாறு உள்ள அழகான பகுதியாகும். இவ்விடத்தில் உள்ள மண் தொடர்ந்து அகழப்படுமாயின், இலகுவாக வெள்ளம் புகுந்து ஆண்டுதோறும் மக்களை நிர்க்கதிக்கு உள்ளாக்கும் அவலநிலை ஏற்படும்.

ஆனால், இலகுவாக ஓர் இடத்தில் மண்ணை ஏற்ற முடியும் என்ற காரணத்திற்காகவே இவ் விடத்தில் மண் அகழ அனுமதி கொடுக்கப்பட்டுள்ளதா? பொது மக்களின் வாழ்வு, பிரதேசத்தின் சிறப்பு, பிரதேசத்தின் நிலை, இயற்கை அழிவு என எந்த விதமான விடயத்தையும் கருத்தில் கொள்ளாது, மண் அகழுவது, இயற்கையின் சமநிலைக்கும் மக்களின் வாழ்வுக்கும் மிக மிக மோசமான விளைவுகளை எதிர்காலத்தில் ஏற்படுத்தும்.

எனவே, இதனை உடன் நிறுத்துமாறு கோரி ஜனாதிபதிக்கு முகவரியிட்ட முறைப்பாட்டினை வெருகல் மக்கள் அனுப்பியுள்ளனர். முறைப்பாட்டில் முன் வைக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு:

'தாங்கள் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற நாள் முதல் நாட்டின் எதிர்காலச் சந்ததியின் வளமான வாழ்வை மையமாகக்கொண்டு பல்வேறு திட்டங்களை செயற்படுத்தி வருகின்றீர்கள். மிகக் கடுமையான சவால் மற்றும் எதிர்ப்புகளுக்கும் மத்தியில் இயற்கையினைக்காக்க சங்கல்ப்பம் பூண்டு, துணிகரமாகப் பயணம் செய்கின்றீர்கள். அவ்வாறான இயற்கை நேய, பசுமைச் சிந்தனை கொண்ட தங்கள் அனைத்துச் செயற்பாடுகளுக்காகவும் தங்களை வாழ்த்துகின்றோம்.

நடைபெற்று முடிந்த ஸ்கொட்லாந்து கிளாஸ்கோ கோப்26 மாநாட்டிலும் உலகத்தலைவர்கள் மத்தியில் இயற்கையினைக் காக்கும் தீர்மானங்களை மிக வெளிப்படையாக அறிவித்துள்ளீர்கள். மண் வளத்தைக் காக்க இரசாயன உரம் மற்றும் பூச்சிகொல்லி, களைகொல்லி இரசாயனம் அனைத்தையும் முற்றாகத் தடைசெய்து எந்தவொரு ஜனாதிபதியும் செய்யாத காரியத்தைச் செய்திருக்கின்றீர்கள்.

ஆனால், தாங்கள் இவ்வாறான உயர்வான சிந்தனை செயலுடன் பயணிக்க பல அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் பெரும் பணத்தாசை கொண்டு, மண்வளத்தைச் சிதைத்துவருகின்றனர். ஆற்றுப்படுக்கைகள், மணற்பாங்கான நிலம் அனைத்தையும் வகைதொகையற்று பல இலட்சம் கனவடி மண்ணை அகழ்ந்து வியாபாரம் செய்து, இயற்கையினை அழிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுவருகின்றனர்.

பயிர்ச்செய்கைக்கு இயற்கை உரத்தைப்பாவிக்க மண்வளத்தைப் பேண நீங்கள் எடுக்கும் முயற்சிக்கு, மணல் அகழ்வு முற்றிலும் மாறுபட்டதும் முரணானதாகவும் இருக்கின்றது. நீங்கள் இயற்கை உரத்தைக் கொண்டுவந்துவிடுவீர்கள். ஆனால், பயிர் செய்ய எமக்கு மண் இருக்காது. மண்அகழ்வால் அழிந்துபோகும் மண்ணை யாராலும் மீள உருவாக்கி விட முடியாது என்பதை தாங்களும் அறவீர்கள். எனின் இதற்குத் தீர்வுதான் என்ன?

எமது வெருகல் பிரதேசம் ஒரு பாரம்பரியமாக விவசாயத்தை வாழ்வாதாரமாகக்கொண்டது. மகாவலி ஆற்றின் ஒரு பகுதியின் கொடையால் இவ் ஏழை மக்கள் பசிஆறுகின்றனர். ஆற்றில் ஒதுங்கும் மணல் எமது தேவைக்கு மட்டும் அளவுடன் பயன்படுத்துகின்றோம். அது இயற்கைக்கோ எமக்கோ எந்தப்பாதிப்பையும் தந்ததில்லை; அரசும் இதனை அனுமதிக்கின்றது.

ஆனால், கடந்த நான்கு மாதங்களாக 41 பேருக்கு மண் அகழ்வுக்கான அனுமதி வழங்கப்பட்டு, இரவு பகலாக, கனரக வாகனங்கள் மூலம் வழங்கப்பட்ட அளவுக்கு மேல் சட்டவிரோதமாக பல இலட்சம் கனவடி மண் அகழப்பட்டு வெளிமாவட்டத்திற்கு கொண்டுசெல்லப்படுவது மிக வேதனையைத் தருகின்றது. இந்தச் செயற்பாட்டுக்கு தங்களுடைய கட்சிப் பாராளுமன்ற உறுப்பினரே துணைநிற்பது வேதனையின் உச்சம்; இது தங்கள் பெயருக்கும் கட்சிக்கும், தங்கள் இயற்கை வளம் காக்கும் கொள்கைக்கும் களங்கம் ஏற்படுத்துவதாகவும் இருக்கின்றது.

பிரதேச மக்களுக்கு இந்த மண் அகழ்வால் எந்தப் பயனும் இல்லை. ஆனால் வெள்ளப்பெருக்கு, மண்ணரிப்பு, ஆற்றுப்பெருக்கு, வரட்சி, நிலத்தடி நீர்மட்டம் குறைதல் எனக் கடும் ஆபத்தை விளைவிக்கக்கூடிய இயற்கை அனர்த்தத்தை நிச்சயம் இந்த மண் அகழ்வு ஏற்படுத்தும். யாரோ கோடீஸ்வரர்கள் வயிறு வளர்க்க, ஏழைகள் எமது வயிற்றில் அடிப்பதை நாம் முற்றுமுழுதாக எதிர்க்கின்றோம்.

அரசாங்கம் சட்டரீதியாக வழங்கியிருக்கும் இந்த மணல் அகழ்வுக்கு, எத்தனை அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன? எவ்வளவு கொள்ளவுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது? என்ன வகையான வாகனங்கள் பாவனை செய்யவேண்டும்? ஒரு நாளுக்கு எவ்வளவு அகழ முடியும்? எவ்வளவு காலத்திற்கு இந்த அனுமதிப்பத்திரம் வலிதானது? இதனை யார் மேற்பார்வை செய்து உறுதிப்படுத்துகின்றார், கணக்கிடுகின்றார் என எவையுமேவெளிப்படையாகவும் இல்லை; விதிகள் கடைப்பிடிக்கப்படுவதாகவும் இல்லை.

இதை உரிய அதிகாரிகள் கண்காணிக்கவும் இல்லை; தடுக்கவும் இல்லை; தடுக்கப்போவதும் இல்லை. ஏனெனில், இது பெரும் பணம் புரளும் கொள்ளை, இலஞ்சம், மோசடி அனைத்தும் நடைபெறும் இருட்டுச் சந்தை. எனவே, இந்த நடைமுறைகள் எதுவும் எமக்குத் தேவையில்லை. இந்தப் பகுதியில் மணல் அகழ்வு, வியாபார நோக்கத்துடன் செய்ய வேண்டாம்.

எனவே, தற்போது நடைபெறும் மணல் அகழ்வை உடன் நிறுத்துங்கள். எதிர்காலத்தில் மாவட்டத்திற்கு அப்பால் இங்கிருந்து மண் அகழ்ந்து கொண்டு செல்வதைத் தடைசெய்யுங்கள்.

பிரதேச மக்கள் ஏற்றுக் கூலியுடன் மட்டும் மண்ணைப் பெறும் நிலையை ஏற்படுத்துங்கள் ஆகிய கோரிக்கைகளை மிகத் தாழ்மையுடனும் முன்வைப்பதுடன், இதன் கனம்கருதி இந்த மண்மாபியாக்களின் கொட்டத்தை அடக்கி, எமது இயற்கையினை நாமே அனுபவிக்க, நிம்மதியாக வாழ வழிசெய்யவும்' என்று வெருகல் வாழ் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இனியாவது மணல் அகழ்வு தடுத்து நிறுத்தப்படுமா? வெருகல் மக்களின் கோரிக்கைக்கு தீர்வு கிடைக்குமா..?









# ‘டொப் 100 ஸ்ரீலங்கா’ விருது வழங்கல் விழா



‘அஹச’ ஊடக நிறுவனத்தால், இலங்கையில் உள்ள மிகச் சிறந்த கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், இலக்கியவாதிகள், நடிகர்கள், சமூகசேவையாளர் ஆகியோரைக் கௌரவிக்கும் ‘டொப் 100 ஸ்ரீலங்கா’ எனும் விருது வழங்கல் நிகழ்வு, இலங்கை மன்றக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய, மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர, டவர் மண்டப நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாஸிம் உமர், ‘அஹச’ ஊடக நிறுவனத்தின் தலைவி பிரியங்கா பண்டார உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்: நஸார்)





















# குண்டுபோடும் நாகலிங்க மரம்

## மடத்தடி மீனாட்சி அம்மன் கோவிலில் நட்டுவைப்பு



வி.ரி. சகாதேவராஜா



இலங்கையிலுள்ள ஒரேயொரு மீனாட்சி அம்மன் கோவிலான மடத்தடி மீனாட்சி அம்மன் கோவிலின் மகா குடமுழுக்கு வைபவம், 2022ஆம் ஆண்டு மார்ச் மாதமளவில் நடைபெறவுள்ளது.

வரலாற்றுப் பிரசித்திபெற்ற மடத்தடி மீனாட்சி அம்மன் கோவிலின் மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு, முகப்புக் கோபுரத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் வெள்ளிக்கிழமை (நவம்பர் 26) நடைபெற்றது. அதன்போது, உலகில் அரிதாக கிடைக்கின்ற நாகலிங்க மரத்தின் கன்று, கோவில் வளாகத்தில் நட்டுவைக்கப்பட்டது.

ஆலய பரிபாலன சபைத்தலைவர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் நடைபெற்ற மரம்நடும் வைபவத்தில், கோவில் ஆலோசகர் வி.ரி. சகாதேவராஜா உள்ளிட்ட நிர்வாக சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்தார்கள்.

பிரதமகுரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்களின் வழிகாட்டலில் ஆலய பரிபாலன சபைத்தலைவர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில், இந்த அரிதாகக் காணப்படும் மரத்தை நட்டுவைத்தார்.

நாகலிங்க மரத்தின் உலர்ந்த பழங்கள், கீழே விழுந்து தரையில் பட்டு வெடித்து பெரும் சத்தத்தை ஏற்படுத்தும் தன்மை வாய்ந்தவை. ஆகவே, கோவில்களில் கொள்ளையர்கள் புகாமல் இருக்கவும் பாதுகாப்பின் அடையாளமாகவும் நாகலிங்க மரங்கள் கோவில்களில் வளர்க்கப்படுகின்றன. அத்துடன் இந்த மரத்தின் சகல பகுதிகளும் மருத்துவ குணம் கொண்டவையாகும்.

நாகலிங்க மரம், தென்அமெரிக்காவின் வடபகுதி வெப்ப வலயம், தென் கரிபியன் பகுதிகளைத் தாயகமாகக் கொண்டதாகும். இது 30-35 மீற்றர் உயரம் வரை வளரக்கூடியது. இலங்கையின் சில பகுதிகளிலும் நாகலிங்க மரங்கள் காணப்படுகின்றன. சிங்கள மொழியில், இது ‘சல்’ என அழைக்கப்படுகிறது. இம்மரத்தின் பூ, பிஞ்சாகிக் காயாகிப் பழமாக ஏறத்தாள ஒரு வருடம் முதல் 18 மாதங்கள் வரை ஆகலாம்.

நாகலிங்க மரத்தின் இலை, பழங்களிலுள்ள ‘டைஹைட்ரோ டையாக்சின், டோலோ குயினாசோலோன், டிரிப்டான்ரின் இன்டிகோ, இன்டுருபின் ஐசாடின் ஆகிய பதார்த்தங்கள், எதிர் உயிரியாகச் செயற்பட்டு, தோல் உட்பட உடலின் மென்மையான பகுதிகளில் வளரும் பூஞ்சை, பாக்டீரியா போன்ற கிருமிகளை அழிக்கின்றன.

இந்த மரத்தின் பட்டை, மலேரியா காய்ச்சலைக் குணப்படுத்தப் பயன்படுத்தப்படுகிறது. இதன் இலைகளை மையாக அரைத்து, பூஞ்சை கிருமியால் தோன்றும் சொறி, சிரங்கு, படர் தாமரை, படை ஆகியன உள்ள இடங்களில் தடவ, குணமுண்டாகும்.

நாகலிங்கப் பூவின் லிங்கம் போன்ற பகுதியை அரைத்து, புண்களின் மேல் தடவ, புண்கள் ஆறும். இதன் இலைகள் நுண்கிருமிகளை அழிக்கும் ஆற்றல் கொண்டதால், இவற்றை மென்று சாப்பிட, பல் மற்றும் ஈறுகளின் இடைவெளிகளில் தங்கியுள்ள கிருமிகளை அழித்து, பல்வலியைக் குறைக்கின்றன; பற்கள் சொத்தையாகாமலும் தடுக்கின்றன.

மடத்தடி மீனாட்சி அம்மன் கோவிலின் மகா குடமுழுக்கு வைபவம் 2022 மார்ச் மாதமளவில் நடைபெறவுள்ளதை அடுத்து, அதற்கான பொதுக்கூட்டம் டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தப் பொதுக்கூட்டத்துக்கு அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல தமிழ்க் கிராமங்களிலுமுள்ள மீனாட்சி அம்மன் அடியார்கள், சுதந்திரமாகக் கலந்துகொள்ள முடியும். அன்றைய தினம், அவர்கள் மத்தியில் இருந்து, மகா கும்பாபிஷேகக் குழு உள்ளிட்ட பல உபகுழுக்களும் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியின் ஒரு இலட்சம் கிலோ மீற்றர் வீதி அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ், வரலாற்றுப் பிரசித்திபெற்ற மடத்தடி மீனாட்சி அம்மன் கோவிலுக்குச் செல்லும் வீதி, கொங்கிறீட் வீதியாக புனர்நிர்மாணம் செய்யப்படவிருக்கின்றது.

நீண்டகாலமாக இவ்வீதி புனரமைக்கப்படாமல் தூர்ந்துபோய் போக்குவரத்துக்குப் பொருத்தமில்லாததாக இருந்தது. இவ்வீதி புனரமைப்புக்கான அளவை மதிப்பீட்டு வேலைகளை, ஆலயத் தலைவர் கி. ஜெயசிறில் முன்னிலையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கல்முனைப் பிராந்திய சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் எ.எம். ஜௌபர் மேற்கொண்டார்.

நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினர் ரி. யோகநாயகன், திருக்கோவில் பிரதேச சபை உறுப்பினர் எஸ். அரியநாயகம் ஆகியோர் மேற்கொண்ட தீவிர முயற்சியின் காரணமாக, சுமார் ஒன்றரை கிலோ மீற்றர் வீதி, கோவிலுக்காக கொங்கிறீட் வீதியாக மாற்றி அமைக்கப்படவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் சனிக்கிழமை, 04 டிசெம்பர் 2021, இல. 08, ஹுணுப்பிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.